ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 53

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 5	மேமீ 1953 விஜயஹு வைகாசிமீ	5 இதழ்

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம்–53.

அற்புதன் செம்மையிராமானுசன் * என்னையாளவந்த
கற்பகம் கற்றவர்காமுறுசீலன்—* கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதேன்னும்
நற்போருள்தன்னை * இந்நானிலத்தே வந்துநாட்டினனே.

என்னையாட்கொள்வதற்காகத் திருவவதரித்தவரும், கல்பவ்ருக்ஷப்போன்று ஸகலார்த்தங்களையுமளிக்கவல்லவரும், ஞானிகள் ஆசைப்படும்படியான சீலகுணத்தையுடையவரும், ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடையவரும், எந்த விஷயத்திலும் ஆர்ஜவமே வடிவெடுத்திருப்பவருமான எம்பெருமானார் இவ்வுலகில் தோன்றி ஸ்தாபித்தருளின மஹார்த்தம் யாதெனில்; எண்ணிறந்திருக்கின்ற ஆத்மவர்க்கங்களும், அவ்வாத்மாக்களுக்கு இருப்பிடமான அளவிறந்த எல்லாவுலகங்களும் எம்பெருமானுடைய ஸொத்துக்களாம் என்பதே.

எம்பெருமானார் இந்நிலவுலகில் திருவவதரித்தருளி ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யரென்றும் உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யரென்றும் தாம் விருது வஹித்ததல்லாமல் தம் அடிபணிந்தாரையும் அவ்விருது வஹிக்கச் செய்தருளினவர் என்பது ப்ரஸித்தம். அப்பராசிரியர் இதரமதஸ்தர்களால் கூறப்பட்ட பலபல அபார்த்தங்களை நிரஸித்தருளி நற்பொருள்களை நிலைநாட்டினரென்பதும் ப்ரஸித்தம். அப்படி நிலைநாட்டிய நற்பொருள்களுள் க முக்கியமான வொருபொருள் இப்பாட்டில் எடுத்துரைக்கப்படுகிறது.

மாயாவாதிகளென்கிற இதர மதஸ்தர்கள் ப்ரஹ்மமொன்றுதான் ஸத்யமென்றும் ு சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சமெல்லாம் அஸத்யமென்றும் ஸித்தாந்தம் செய்து ்தார்கள். வ்யாவஹாரிகதசை, பாரமார்த்திகதசை என்ற இரண்டு தசைகளையேற்படுக் ்டு, வ்யாவஹாரிகதசையில் பரப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபட்ட சேதநாசேதநங் ருப்பனவாகத் தோன்றினாலும் பாரமார்த்திகதசையில் இப்படிப்பட்ட பேதாநுஸந்

தானம் அடியோடு இருக்கமாட்டாதென்கிறார்கள். அவர்களுடைய மதப்ரக்ரியையைச் சுருங்கச் சொல்லில் இவ்வளவே கேண்மின்;—“ 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ” [நிர்விசேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்ம.] என்பது அவர்களது ஸூத்ரம்போன்றவொரு வார்த்தை. * 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 * [ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம] என்று உபநிஷத்து ஓதுகையாலே அந்த பரப்ரஹ்மம் ஜ்ஞானமாத்ரஸ்வரூபமாகும். அது ஸ்வயம்ப்ரகாசமான ஸ்வபாவமானாலும் தனது அநாதியான அவித்யையினாலே அபாரமார்த்தமான ஜ்ஞாத்ருஜ்ஞேயாதி பேதத்தை அநுபவிக்கிறது [தன்னிடத்திலே ஏறிட்டுக்கொள்ளுகிறது]; வஸ்துத: ஜ்ஞாத்ருஜ்ஞேயாதிரூபங்களான நாநாவஸ்துக்கள் இல்லையாயிருக்கச் செய்தேயும் அவையுள்ளனவாக மயக்கங்கொள்ளுகிறது. அவித்யாபரிணமபூதனான ஜீவாத்மாவானவன் * தத்த்வமஸீத்யாதி வாக்யத்தினால் பிறக்கும் ஞானத்தினால் அத்வைத வித்யை கைபுகுரப்பெற்றவனாய் அந்த பரப்ரஹ்மத்தினுடைய அந்த ப்ரமத்தைப் போக்கடிக்கிறான். (அதாவது) * தத் த்வமஸி ச்வேதகேதோ * என்ற வேதாந்த வாக்யத்தின் உண்மைப்பொருளான அத்வைதம் எப்போது ஜீவாத்மாவுக்கு ஜ்ஞானகோசரமாகிறதோ அப்போதுதான் பந்தமோக்ஷம் என்கை. ஆகவே கண்ணிற் காண்பதெல்லாம் பொய்—என்பதே மாயாவாதிகளின் ஸித்தாந்தஸாரம்.

இந்த வாதத்தை லகுவாகக் கண்டிக்கிறமுறை ஒன்றுண்டு; அதாவது, ‘எல்லாம் பொய்’ என்று சொல்கிறவர்களை நோக்கி ஒன்று கேட்கவேண்டியது; எல்லாம் பொய்யானால் ஆயிடுக; ‘ஸர்வம் மித்த்யா’ என்கிற இந்த ப்ரதீதியாவது உண்மைதானா? சொல்லுங்கள்—என்று கேட்கவேணும். உண்மைதான் என்று விடை கூறுவர்களாகில், ஸர்வபதார்த்தத்திற்குள் சேர்ந்த இந்த ப்ரதீதியொன்று உண்மை—என்று தேறுகையாலே ஸர்வ மித்த்யாத்வ ப்ரதிஜ்ஞை பழுதேயாம். இந்த ஆபத்தில் நின்றும் தப்பவேண்டி ‘ஸர்வம் மித்த்யா’ என்கிற இந்த ப்ரதீதியும் பொய்யென்று அவர்கள் சொல்லியாகவேண்டும். அப்போது, தங்களுடைய வாதத்தைத் தாங்களே பொய்யென்று கூறி முடித்துவிட்டதாகத் தேறுகின்றது. எல்லாம் மெய்யென்று இசைந்து கொள்ளப்பட்டதாகவே முடிந்ததாகும். இது, மாயாவாதிகளை லகுவாகக் கண்டிக்கிறவழி. ஸ்ரீபாஷ்யாதிகளில் இந்த வழியும் காட்டப்படுகிறது. வேறு வழிகளில் காட்டப்படுகிற கண்டனப்ரகாரத்தையும் சிறிது காட்டுவோம்.

சாந்தோக்ய உபநிஷத்தில் (6—2—1.) * 𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌦𑍇𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍍 * [ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்] என்று ஓதப்பட்டுள்ளது. ப்ரஹ்மமொன்றே ஸத்யமானதென்றும் மற்றெல்லாப் பொருளும் பொய்யென்றும் கூறுகின்ற அத்வைதவாதிகள் இந்த உபநிஷத் வாக்கியத்தை முக்க்ய ப்ரமாணமாகக் காட்டுவர்கள். இதில் அத்விதீயம் என்றவொரு பதம் முக்கியமானதாகக் கொள்ளப்படும். ப்ரஹ்மம் ஒன்றேயுளது, மற்றொன்றும் இல்லை—என்பதாக இப்பதத்தினால் விளங்குகின்றதென்பர் அத்வைதிகள். ‘ப்ரஹ்மமும் ஸத்யம், மற்றெல்லாப்பொருள்களும் ஸத்யமே’ எனக்கொள்ளும் நம்மவர்கள் இதற்கு என்ன சொல்லுகிறார்களென்பதைச் சுருங்கச் சொல்லுவோம்.

ஸார்வபௌமனான ஒரு மஹாராஜனைச் சுட்டி “இவன் அத்விதீயனான அரசன்” என்று சொல்லுவோமானால், அவனுக்கு மக்களில்லை மனைவியில்லை உடுக்கத்துணியில்லை நிற்க நிழலில்லை, உண்ணச் சோறில்லை என்றதாகுமோ? ‘அரசன் அத்விதீயன்’ என்றால் அவன் இரண்டாவது பொருளையுடையனல்லாதவன் என்று பொருள்படுதலால் இப்படித்தான் பொருள்கொண்டாகவேணுமென்னில், இதை உலகில் ஒருவரும் ஒப்புக்கொள்ளமாட்டார். அத்வைதிகளும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இவ்வரசனுக்கு நிகரான வேறொ

னில்லை' என்று பொருளாகுமேயல்லது இவன் தவிர உலகத்தில் வேறொரு பொருளே கிடையாதென்று பொருளாகமாட்டாதென்பதை அனைவரும் ஏககண்டமாக இசைந்து தீருவர்கள். லோகாநுபவஸாக்ஷிகமான இவ்வர்த்தந்தான் *ஏகமேவாத்விதீயம்* என்றவிடத்திற்கும் பொருந்தும். * பதிம் விச்வஸ்ய * என்று வேதாந்தங்களில் புகழப்படுகிறான் ஈச்வரன். ஈசிதவ்யங்களான வஸ்து வொன்றுமேயில்லையென்று முடித்திட்டு ஈச்வரனுளனென்றால் அஜாகளஸ்தனத்திற்கும் அவனுக்கும் ஒருவாசியுமில்லையாகுமன்றோ. எம்பெருமானுக்குப் பழிப்பாகவன்றோ இப்பொருள் முடிந்து நிற்கும்.

உபநிஷத்துக்களின் உண்மைப்பொருளைக்கண்டவர்களில் தலைவரான ஸ்வாமி யெம்பெருமானார், எம்பெருமானை ஸர்வேச்வரனென்னும்போது ஸர்வமும் ஸத்யமாயிருந்து தீரவேணுமென்றும், அப்படியிருந்தாலொழிய ஸர்வேச்வரத்வம் எம்பெருமானுக்குப் புகழ்ச்சியாகமாட்டாதென்றும் காட்டி ஸர்வ பதார்த்தங்களையும் ஸத்யமாகக்கொண்டு அவற்றை அப்பெருமானுடைய ஸொத்துக்களாக நிரூபித்தருளினாராயிற்று, இது தன்னையே இப்பாசுரத்தின் பின்னடிகளில் அமுதனார் அருளிச் செய்துவைத்தாரென்றுணர்க.

பேரருளாளன் ப்ரஹ்மோத்ஸவம் நிகழும் வைகாசிமீ 12உ (25-5-53) திங்கட்கிழமை முதலாகக் காஞ்சீபுரம் தேவப்பெருமாளுக்கு "வையங்கண்ட வைகாசித்திருநாள்" என்று ஜகத்ப்ரஸித்தமான ப்ரஹ்மோத்ஸவம் நடைபெற்று வருகின்றது 27—5—53 புதன்கிழமையன்று "கஞ்சி கருடஸேவை" என்று நாடெங்கும் புகழ்பெற்ற பெரிய திருவடி மஹோத்ஸவம். அன்றுதான் நம்மாழ்வாருடைய சாத்துமுறையும்.

அஹோபிலமடாதிபதி ஸ்வாமியின் யாத்திரை.

ஸ்ரீமதஹோபிலமடாஸ்தானத்தின் நாற்பத்திரண்டாவது பட்டத்தை அலங்கரித்திருந்த அழகியசிங்கர் [இஞ்சிமேடு ஸ்வாமி] திருநாட்டுக்கெழுந்தருளியபின் ஸ்ரீமத் தேவனார் விளாகம் ஸ்வாமி [ஸ்ரீவீரராகவ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்] அந்த ஆஸ்தானத்தில் அபிஷிக்தரானாரென்பது உலகமறிந்ததே. அந்த ஸ்வாமி, சென்ற பங்குனி மாதத்திலிருந்து யாத்ரையாகப் புறப்பட்டருளி சிஷ்யாநுக்ரஹம் செய்து வருகிறார். திருவல்லிக்கேணி, மதராஸ், மயிலை, மாம்பலம் முதலான விடங்களில் விசேஷமான வரவேற்புகளும் டோலோத்ஸவங்களும் வெகு சிறப்பாக நடைபெற்றன. ஆங்காங்கு ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸ அமுதமொழிகளும் ரஸிகஜநமநோஹரங்களாக நடைபெற்று வருகின்றன. முதன் முதலாகத் திருவல்லிக்கேணி அஹோபில மடத்தில் வேதப்ராமாண்யம் என்னும் பொருள்பற்றி உபந்யாஸம் செய்தருளினார். சொல்லின்பமும் பொருளின்பமும் மிகவும் ரஸகனமாயிருந்தனவென்று பலரும் புகழும்படியாயிருந்தது.

திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதி முதலான விடங்களில் ஸ்ரீஸ்வாமி மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளக்கூடுமென்று பலரும் ப்ரதீக்ஷித்திருந்ததாகவும், ஸ்ரீஸ்வாமி அதற்கு இசைந்தருளவில்லையென்றும், ஏதோ அநிவார்ய காரண விசேஷத்தினால் திருவள்ளூர் ஸந்நிதியில் மங்களாசாஸனம் செய்தது கொண்டு எல்லாஸந்நிதிகளிலும் நாம் ப்ரவேசிக்கவிருக்கிறோமென்று யாரும் நினைக்கலாகாதென்று ஸாதித்ததாகவும் கேள்விப்

படுகிறோம். ஸ்ரீஸ்வாமியின் தற்காலயாத்திரை ஸ்ரீஅஹோபில க்ஷேத்ரம் வரையில் செல்லுமென்றும், பிறகு சாதுர்மாஸ்யஸங்கல்பத்திற்கு ஸ்ரீமதுராந்தகம் எழுந்தருள நேருமென்றும் சொல்லுகிறார்கள். ஸ்ரீஸ்வாமியின் புகழ் எங்கும் பரவுக. ... ... (*)

மிகவும் சோகாஸ்பதமான செய்தி.


ஸ்ரீரங்கத்திற்கடுத்த புத்தூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீவைஷ்ணவஸுதர்சநம் என்கிற பத்திரிகையை நடத்திக்கொண்டும் பெரியவாச்சான்பிள்ளை க்ரந்தமாலை முதலான பல ஸம்ப்ரதாய க்ரந்தங்களைப் பிரசுரம் செய்துகொண்டும் உலகுக்கு மஹோபகாரகராய் விளங்கிவந்த ஸ்ரீ. உ. வே. K. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி (அட்வொகேட்) 14—5—53 வைகாசிமீ 1உ புத்தூரில் தம்முடைய திருமாளிகையில் திருநாட்டுக்கெழுந்தருளின செய்தியை யறிந்து மிகவும் சோகிக்கிறோம். இம்மஹானுக்கு வயது 56 மட்டுமே ஆயிற்று. சிறந்த அட்வொகேட்டாக விளங்கினதுடன் உபயவேதாந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களையெல்லாம் வரியடைவே கற்று சிறந்த க்ரந்திகராகவும் விளங்கினார். நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு இவர் செய்திருக்கும் அரும்பணிகள் ஆச்சரியமானவை. பத்திரிகை வெளியிடுவது, க்ரந்தங்கள் பிரசுரிப்பது என்கிற பணியில் இவர் கைவைத்து 5, 6. வருஷங்களேயாயின. வெகு விரைவில் பல க்ரந்த ரத்நங்களை வெளியிட்டார். இன்னும் 5, 6 ஸம்வத்ஸரங்களாவது இந்த மஹான் இவ்விபூதியில் எழுந்தருளியிருந்தால் இன்னமும் அபரிமிதமான லோகோபகாரங்களைச் செய்திருப்பர். இவ்வுலகின் தௌர்ப்பாக்யம் சோசநீயமானது.

சிலவாண்டுகளுக்குமுன்பு, பரந்தரஹஸ்யம் என்னும் க்ரந்த விஷயமாக இந்த ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் அபிப்ராயபேதமேற்பட்டு வாதவிவாதங்கள் சிறிது நடந்தனவென்பது பலர்க்கும் நினைவிருக்கும். ப்ராக்ருதிஸ்வபாவத்தால் நேருமது ஒருபுறமிருக்க அந்த ஸ்வாமியின் குணபக்ஷபாதித்வம் முதலான பல நற்குணங்களைப் பிறகு க்ரமேண அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. இவருடைய திருக்குமாரர்கள் இருவரும் சிறந்த யோக்யதை பெற்றவர்களாய் அவருடைய புகழை நிலைநிறுத்தக்கூடியவர்களாய் விளங்குகின்றார்கள். ஜ்யேஷ்ட குமாரரான ஸ்ரீமான். S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (அட்வொகேட்) திருத்தகப்பனாரோடு கூடவே அவர்க்கு உசாத்துணையாயிருந்து ஸகல காரியங்களையும் பொறுப்புடன் நிர்வஹித்து வந்தார். இனியும் அவர் குறையற நிர்வஹிக்க வல்ல நல் விரகர் என்பதைக் கொண்டு நாம் ஆச்வஸிக்கிறோம். ஸமீபகாலத்தில் அவர் நமக்கு எழுதியிருக்கின்ற பத்ரிகையிலிருந்து ஒரு பகுதியை மட்டும் இங்கு வெளியிட்டு நிற்கிறோம்;

> "கத்யத்ரய வ்யாக்க்யானம் அச்சாகி முடியும் ஸமயத்தில் ஸ்ரீவைகுண்டாதிவர்ணனைகளை அநுபவித்துக்கொண்டே திருத்தகப்பனார் கடைசி நாட்களைக் கழித்தனர். புஸ்தகம் முடியும் தருவாயில் பரமபதநாதன் ஸ்ரீவைகுண்டத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டான், எம்பெருமானார் தம் திருவடி நிழலுக்கே கூவிக்கொண்டார். சில நாட்களுக்குமுன் அடியேனை அருகில் அழைத்து ஸுதர்சந பத்ரிகையையும் பூர்வாசார்ய க்ரந்த ப்ரகாசனத்தையும் குறையற நடத்திவரவேணுமென்று நியமித்தருளினார். பதின்மர் தாங்கவேண்டிய—தாம் ஒருவராகத் தாங்கிவந்த — பாரங்களை அடியோங்கள் மேலே சுமத்திவிட்டு கவலைகளெல்லாம் நீங்கப்பெற்று களிப்பும் கவர்வுமின்றிப் பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதியராய் அடியார்கள் குழாங்களை உடன் கூடிவிட்டார். ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்துடன் ஸம்ஸ்காரங்கள் நேற்று (15—3—53) விசேஷமாக நடைபெற்றன. ...."
>
> (பத்ராதிபர்.)

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



சாரீரகமீமாம்ஸையைப் பற்றின

அறுபத்திரண்டு வார்த்தாமாலை.

(ஸ்ரீகாஞ்சி. அண்ணங்கராசாரியர்.)

ச்லோ ॥ द्विषष्टितमहायनव्यपगमस्य लक्ष्मास्त्विति द्विषष्टिविषयावलीविलसिताः कृतीर्भूयसीः ।
व्यलेखिषमुदारधीविलसितात्मनां शासनात् प्रकाशमिह नीयते कृतिरियं द्वितीयोदिता ॥

1. இவ்விருள் தருமாஞாலத்திற் பிறப்பது வெறுக்கத்தக்கதாயினும் * இச்சுவை தவிர யான்போயிந்திரலோகமாளு மச்சுவை பெறினும் வேண்டேன் * என்றும் * ஸம்ஸார ஏஷ பகவந்! அபவர்க்க ஏவ * என்றும் * வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:* என்றும் அநுஸந்திக்க நேரும்போது உள்ளத்திலுண்டாகின்ற உகப்பு நமக்கு எப்போதும் குன்றி ருக்குமாகில் மீண்டுமீண்டும் இந்நிலத்தில் பிறக்கவேணுமென்கிற குதூஹலமே நமக்கு உற்றதாகும். ஆண்டாள் * எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் * என்றருளிச் செய்கையாலே அவள் இந்நிலத்தில் பல பிறவிகளும் பிறந்து பேரின்ப மநுபவிக்கப் பாரித்தாளென்பது தெரியவரும். நாமும் அவ்வாண்டாளுடைய ஆசம்ஸையின்படியே ஏழேழ்பிறப்பும் பிறந்து ப்ரஹ்மாநந்தாநுபவம் பண்ணக் குதூஹலங் கொள்வோம். * இருள்தருமா ஞாலத்துளினிப்பிறவி யான்வேண்டேன் * என்றும் * பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பமாதலால் பிறவி வேண்டேன் * என்றும் வெறுத்துப் பேசின பேச்சு நமக்குவேண்டா. இப்போது நாம் பிறந்து எவ்விதமான ஆனந்தத்தை யநுபவித்து வருகிறோமோ, இவ்விதமான ஆனந்தத்திற்குச் சிறிதும் லோபமில்லாமல் மேன்மேலும் எத்தனை பிறவிகளை எம்பெருமான் தந்தருளினாலும் பெருமகிழ்ச்சியுடன் அவற்றை வரவேற்போமாக.

2. நன்மைகளுக்குதவாத த்வீபாந்தரங்களிலே நாம் பிறந்திலோம்; ஸகல ச்ரேயஸ்ஸுக்களுக்கும் ஆஸ்பதமான 'ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே' ஜனிக்கப்பெற்றோமே; இதுதன்னிலும் க்ரிமிகீட பசுபக்ஷிகளாகப் பிறவாமலும் * துர்லபோ மாநுஷோ தேஹ: * என்றும் * மானிடப் பிறவியந்தோ மதிக்கிலர் * என்றும் புகழப்படுகிற மானிடப் பிறவிபெற்றோம். இதுதன்னிலும் வேத வேதாந்த வேதாங்கங்களை நிஸ்ஸங்கோசமாக அதிகரிப்பதற்குப் பாங்கான ஜாதியிலே ஜனிக்கப்பெற்றோம்; அதுதன்னிலும் * ஆழ்வார்களையுமருளிச் செயல்களையும் தாழ்வா நினைத்து நரகில் வீழ்வார்களது வகுப்பிலன்றிக்கே * தேவுமற்றறியேன் குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித் திரிவனே என்னும் வகுப்பிலும், * அமானவனும் நம்மைக் கரத்தாலே தீண்டல் கடனும்படி மணவாள மாமுனிவன் பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை யுன்னிச் சிரத்தாலே தீண்டுங் குடியிலும் பிறக்கப்பெற்றோம். அவாங்மநஸ கோசரமென்று ஓதப்படுகிற எம்பெருமானுடைய ஆனந்தமும் நம்முடைய ஆனந்தத்திற்கு நிகராகுமோ? * இல்லையெனக் கெதிரில்லையெனக் கெதிரில்லையெனக் கெதிரே * என்று வானம்பிளக்க உத்கோஷித்து ஸஸம்ப்ரம ந்ருத்தம் செய்யவன்றோ நாம் பிறந்திருக்கிறோம்.

3. இத்தகைய மஹாபாக்யம்பெற்ற நமக்கு "புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜடரே சயநம்" என்னும்படியான ஸம்ஸாரம் மறுவலிடாதாயினும் நாம் புந:புந: ஜன்மத்தையே பகவத் ஸந்நிதியில் ப்ரார்த்திக்கக் குதுகலிக்கின்றோம். திருநாட்டிலே சென்று என்ன செய்யப்போகிறோம். அங்கு ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதிகள் ஸேவிக்க ப்ரஸக்தியுண்டோ? ஸ்ரீவசநபூஷண ஆசார்யஹ்ருதயாதிகள் அநுஸந்திக்க அவகாச முண்டோ? * ஏதத் ஸாம காயந்நாஸ்தே * என்று உபநிஷத்து ஓதினபடி ஹாவு ஹாவு ஹாவு என்று கானம் பண்ணிக்கொண்டிருக்கலாமத்தனை. இந்த கானம் யாருக்கு வேணும்? இங்கு நாம் ஓதுகிற உபயவேதங்களையும் ஸ்தோத்ரங்களையும் ரஹஸ்யங்களையும் நித்ய ஸூரிகளும் முக்தாத்மாக்களுங் கேட்டு அவர்களும் எம்பெருமானுடைய நியமனம்பெற்று இங்கேவந்து பிறக்க ஆசைப்படாநிற்க, நாம் அங்கேபோக நினைப்பது தகுதியோ?

4. நமக்குண்டான ஸதாசார்ய ஸம்பந்த வைபவாதிகள் காரணமாக ஒருகால் நம்மை எம்பெருமான் அங்கே கொண்டுபோக நினைத்தாலும் கொண்டுபோய்விட்டாலும் "நச புநராவர்த்ததே நச புநராவர்த்ததே" என்கிற உபநிஷத்தையும், * அநாவ்ருத்திச் சப்தாதநாவ்ருத்திச் சப்தாத் * என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தையும், * த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி * என்ற கீதையையும் கிழித்தெறிந்து நாம் மீண்டுமிங்கே ஓடிவந்துவிட வேணுமேயொழிய அங்கே தங்கியிருக்கத் தகாதென்பது அடியேனுடைய திண்ணிய அத்யவஸாயம். நம்முடைய யஜுர்வேதத்தில் ஆறுவது காண்டத்தின் ஆரம்பத்தில் "கோ ஹி தத் வேத யத்யமுஷ்மிந் லோகே அஸ்திவா ந வேதி" என்று ஓதப்பட்டுள்ளது. இதன் பொருள் தெரியுமோ? 'மேலுலகத்தில் சேமமுண்டென்று யார் கண்டார்? உண்டோ இல்லையோ என்று ஸந்தேஹிக்கும்படியாகவே யுள்ளது' என்பது இந்த வாக்யத்தின் தாற்பரியம். இதற்கு முன்வாக்யத்தில் * नास्माल्लोकात् स्वेतव्यमिवेत्याहुः * (* நாஸ்மால் லோகாத் ஸ்வேதவ்யமிவேத்யாஹு: என்பதில்) இந்த வுலகத்தை விட்டுப்போக விரும்பலாகாதென்றும் சொல்லிற்று. * ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின்போவதே * என்றருளிச் செய்த திருமங்கையாழ்வார் திருவுள்ளமுமிதுவே.

5. இவ்விபூதியில் நாம் பலவகையான ஆனந்தங்களை யநுபவிக்கிறோம். லௌகிகமான ஆனந்தங்களை நெஞ்சாலும் நினைக்கவேண்டா. ஸ்வரூபாநுரூபமாக நாம் அநுபவிக்கும் ஆனந்தங்கள் அபரிமிதம். வாசாமகோசரம். * சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே மதிட்கச்சியூரகமே பேரகமே வெள்ளறையே வெஃகாவே பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ஆராமஞ் சூழ்ந்தவரங்கமென்று பதியேபரவித்தொழுந் தொண்டர்களாய்க் கொண்டு அநுபவிக்குமானந்தம் ஒருபுறமிருக்க நம் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் அருமருந்தாக அருளிச்செய்திருக்கின்ற திவ்ய ஸூக்திகளை 'அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே' என்னும்படி நித்யாபூர்வமான அம்ருதமாகப் பருகி நாமநுபவிக்குமானந்தம் இணையற்றது. இவ்வானந்தத்திற்கு எந்த ஆனந்தமும் ஈடாகாதென்பது அதிசயோக்தியன்று. அதிலும், நம்பிள்ளை தொடங்கி மணவாள மாமுனிகளீறாகவுள்ள ஆசார்ய ஸார்வபௌமர்களின் அமுதிலுமாற்றவினிய திவ்ய ஸ்ரீஸூக்திகளை யனுபவித்து எய்துமின்பம் * நெஞ்சால் நினைப்பரிதால் என்னத்தகுமத்தனை. இதற்கு நாம் இட்டுப் பிறந்திருப்பது விலக்ஷணமானதொரு பாக்ய விசேஷமன்றோ. அநல்பமான தபஸ்ஸின் பலனன்றோ?

6. அந்த திவ்ய ஸூக்திகளில் ஆழவிழிந்து அபூர்வார்த்தங்களை ஸதாசார்ய ஸன்னிதானத்தில் கேட்டு அவற்றை நெஞ்சில் தேக்கி வைத்துக்கொள்வதுதான் நமக்கு ஜன்ம ஸாபல்யமாகும். ஆசார்ய சுச்ரூஷைகளுக்கு அவகாசம் பெறாதவர்களும் அவ்வர்த்தங்களை இழக்கவொண்ணாதென்று கருதியே அடியேனிப்போது சில வார்த்தா மாலைகளினால் அந்த அர்த்த விசேஷங்களையெல்லாம் ஆஸ்திகர்களுக்கு அறிவிக்கவிரும்பியிருக்கின்றேன். உபயவேதாந்தங்களிலும் ஸ்ரீவசநபூஷணாதிரஹஸ்யங்களிலும் மற்றும்

ஸ்ரீராமாயண பகவத் கீதாதிகளிலும் முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னுமாக விளங்குகின்ற அர்த்த விசேஷங்களை எளிய வார்த்தைகள்மூலமாகவே வெளியிடக் குதூஹலங் கொண்டிராநின்றேன். அறுபத்திரண்டு வார்த்தைகள்கொண்ட அனேகவார்த்தாமாலைகளுக்குள் இந்த வார்த்தாமாலையில் ஸம்ஸ்க்ருத வேதாந்தமாகிய (ப்ரஹ்மஸூத்ர மென்கிற) சாரீரகமீமாம்ஸையின் அரியபெரியபொருள்களைப்பற்றி யெழுதுகின்றேன். மிகக் கடினமான விஷயங்களையும் கூடுமானவரையில் எளிய நடையில் எழுதுவேன். ஆனாலும் விஷயத்தின் காடிந்யம் நம்மால் தவிர்க்கமுடியாமல் நிற்குமிடங்களு முண்டு. அப்படிப்பட்ட விடங்களில் நாம் எவ்வளவு எளிதாக எழுதினாலுங்கூட சிலர்க்குப் பயன் படாமற் போகக்கூடும். அப்படிப்பட்ட சிலவிடங்களைப் பெரியார்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

7. வேதம் கர்ம காண்டமென்றும் ப்ரஹ்ம காண்டமென்றும் இரு வகுப்பாக வுள்ளது. பூர்வ பாகம் கர்மகாண்டமென்றும் உத்தரபாகம் ப்ரஹ்ம காண்ட மென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்ம காண்டமென்பது. பகவானுக்கு ஆராதந ரூபங்களான யஜ்ஞம் முதலிய கர்ம விசேஷங்களை விரிவாகக் கூறும் வேத பாகம் கர்ம காண்டமென்றும், அந்த கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை விரிவாகக்கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்டம் (அதாவது உபநிஷத்து) என்றும் சொல்லிற்றாயிற்று.

8. கர்ம காண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமினி யென்னும் மஹர்ஷி யெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸை யென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமினி மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும், மேல் நான்கு அத்தியாயங்கள் காசக்ருத்ஸ்ந ரென்பவரால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரம் அப்ரஸக்தம். "ஜைமினீயம் ஷோடச லக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. வ்ருத்திக்ரந்தத்தில், பதினாறு அத்யாயங்களும் ஜைமினி ப்ரோக்தமென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்திற்குப் பெயர்.)

9. ப்ரஹ்ம காண்டமென்னும் உபநிஷத்பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷியெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்ட வொரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே சாரீரக மீமாம்ஸை யென்று பெயர். உத்தர மீமாம்ஸையென்றும் வழங்குவர். ப்ரஹ்ம ஸூத்ரம் என்பது இதனையே. ஒவ்வொரு அத்தியாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரக மீமாம்ஸை யென்றதாயிற்று.

10. இதில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும் பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்றுநாற்பத்தைந்து ஸூத்ரங்களையுங் கொண்டது ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ர மென்றதாயிற்று.

11. தத்வ ஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்துகொள்வதற்கு உபநிஷத்துக்களே ஸாதனமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யயமற நிஷ்கர்ஷித்து விளக்கக் கூடியது ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமே யாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. ப்ரஹ்மஸூத்ரமென்கிற சாரீரக மீமாம்ஸையின் பொருளை

நிஷ்கர்ஷமாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்து கொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்ம ஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார்.

12. மஹர்ஷிப்ரணீதங்களான ஸூத்ரங்களின் பொருளை நம் போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால், நம் போன்ற அல்ப மதிகளிடத்தில் பரம கருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என மூன்றுமதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை. இம்மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யம் இயற்றினர். த்வைத மதத்திற்காக ஆனந்ததீர்த்த ஸ்வாமிகள் (மத்வாசார்யர்) பாஷ்யமியற்றினர். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமியெம் பெருமானர் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்தார். வட இந்தியாவில் அதிக ப்ரஸித்தி பெற்றுள்ள வல்லபமதம் நிம்பார்க்க மதம் முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவமதத்திற்காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் மதத்ரயபாஷ்யமென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப் பட்டுலாவுவன.

13. விசிஷ்டாத்வைதிகளென்றும் ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் பகவத்ராமாநுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப் படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாதுவென்பது சொல்லாமலே விளங்கும். உபநிஷத்துக்களின் உண்மைப்பொருளை விளக்கி ஸூத்ர காரருடைய உள்ளத்திற்கு அநுகுணமாக நிஷ்பக்ஷபாதமாய் நிருமிக்கப் பட்டது ஸ்ரீராமாநுஜபாஷ்யமே யென மேனுட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அந்த ஸ்ரீபாஷ்யத்தின் உண்மைப் பொருளானது ச்ருதப்ரகாசிகை முதலிய வியாக்கியான நூல்களின் உதவியினுல் உணரப்படவேண்டும். அதற்கு ஸாமன்ய சாஸ்த்ரங்களின் உதவி இன்றியமையாதது. அப்படிப்பட்ட சாஸ்த்ரஜ்ஞர்கள் நெடுநாள் குருகுல வாஸம் செய்து ஸ்ரீபாஷ்யத்தை யதிகரித்து பாஷ்யாதிகாரிகளென்று பேர்பெற்றுச் சிறந்த வேதாந்திகளாகித் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக உணர்ந்து நிரதிசயானந்த சாலிகளாகின்றனர். அவ்வளவு அதிகாரம் வாய்க்கப் பெருத வர்களையும் கைவிடமாட்டாத கருணை மிக்க நம் பூருவாசாரியர்கள் திவ்ய ப்ரபந்த தத் வ்யாக்யானங்களையும் ரஹஸ்ய தத் வ்யாக்யானங்களையும் மற்றும் பல திவ்ய க்ரந்தங் களையுமருளிச்செய்துள்ளார்களாதலால் ஸ்ரீபாஷ்யத்தில் நேராக அவகாஹிக்க மாட்டாதவர்களும் இழவாமல் அதில் விவரிக்கப் பட்டுள்ள தத்வ ஹித புருஷார்த்தங்களை ஸதாசார்ய ஸகாசத்தில் உணரப் பெறுகின்ருர்கள். அன்னவர்களது ஞானத்திலும் ஒரு குறையில்லை குற்றமில்லை யென்பதுமாத்திரமேயல்லாமல் ஸ்ரீபாஷ்யாதிகாரிகளைக் காட்டிலும் மிக விசதமான ஞானத் தெளிவு பெற்றவர்களாகவும் விளங்குகிருர்கள்.

14. ஆனுலும் ப்ரஹ்ம ஸூத்திரத்தில் என்ன விஷயம் எந்த விதமாகச் சொல்லப் பட்டிருக்கிறது? என்று தெரிந்துகொள்ளப் பலர்க்கு அபிலாஷை யுண்டு. விஸ்தாரமாகத் தெரிந்து கொள்ளாவிடினும் ஸாரஸங்க்ரஹமாகவாவது தெரிந்து கொள்ளவேணுமென்கிற விருப்பமுண்டாகி, அப்படித் தெரிவிப்பதொரு நூல் தமிழிலுண்டாவென்று பலரும் விசாரிப்பதுண்டு. ஸ்ரீபாஷ்ய மொழிபெயர்ப்பு, ச்ருத ப்ரகாசிகை மொழிபெயர்ப்பு என்றிப்படி சில நூல்கள் வெளிவந்தாலும் ப்ரஹ்மஸூத்ரத்தின் ப்ரமேயத்தை ஸாரமாகத் தெரிந்து கொள்வதற்கு உரிய நூல் ஒன்று இருக்க வேண்டியது அவசியமென்றே பலமஹான்கள் கருதுகின்றனர். அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்காக மிகவும் ஊக்கங்கொண்டிருக்கின்றேன். தத் விஷயகமானஸூர்யோதயத்திற்கு இது அருணோதயமாக நினைக்கத்தகும்.

15. ப்ரஹ்மஸூத்ரத்தில் முதல் அதிகரணம் ஜிஜ்ஞாஸாதிகரண மெனப்படும். "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்பது ஸூத்ரம். அத=கர்ம விசாரம் செய்து முடிந்த

பிறகு, அத: = கர்மவிசாரம் முடிந்த காரணத்தினாலேயே, ப்ரஹ்மஜிஜ்ஞாஸா = இச்சைக்கு இலக்கான ப்ரஹ்ம விசாரம் (செய்யத்தக்கது) என்று ஸூத்திரத்தின் மேல் பொருள் அறிக. கர்ம விசாரத்தைச் செய்து முடித்தவர்கள் அந்தக் கருமங்களினுடைய அற்பமும் அஸ்திரமுமான பலன்களில் நசையொழிந்து மோக்ஷபுருஷார்த்தத்தை விரும்புவர்களாதலால் அப்படிப் பட்டவர்களுக்கு ப்ரஹ்ம விசாரம செய்யத் தக்கது என்றதாயிற்று. இதை இன்னமும் சிறிது விவரிப்போம். நன்றாக வேதமோதின வொருவர் ஜைமினி மஹர்ஷியின் கர்மமீமாம்ஸையில் சொல்லப்பட்ட ந்யாயங்களினால் ஜ்யோதிஷ்டோமம் முதலிய யஜ்ஞங்களின் (கருமங்களின்) தன்மை இன்னபடிப்பட்டது, அவற்றை யியற்ற வேண்டிய விதமின்னது, அவற்றின் பலனான ஸ்வர்க்கம் முதலியவற்றின் ஸ்வரூபம் இத் தகைத்து என்று இவ்விஷயங்களை அறுதியிடப் பெற்ற பின்பு ஸ்வர்க்கம் முதலிய அந்தப் பலன்கள் நச்வரங்கள் என்று தெரிந்து கொண்டதன் பலனாக அவற்றைப் பெற வேணுமென்கிற விருப்பம் தொலைந்தொழியப் பெறுகின்றார். பரப்ரஹ்ம ப்ராப்தியாகிற மோக்ஷ புருஷார்த்தத்தில் மேலெழுந்தவொரு உணர்ச்சியிருப்பதனால் இதனைப் பெற வேணுமென்கிற விருப்பமும் அவர்க்கு உண்டாகின்றது. இப்படி ப்ரஹ்ம ப்ராப்தியில் விருப்பமுண்டானவாறே, அந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது, அதனைப் பெறுதற்கு உபாயமின்னது, பெற்று அநுபவிக்கும் பலன் இன்னபடிப்பட்டது என்றித்தகைய விஷயங்களை நிர்ணயிக்க வேண்டுமாதலால் இந்த நிர்ணயம் ப்ரஹ்ம மீமாம்ஸையிற் சொல்லப்பட்டுள்ள நியாயங்களினாலேயே விளையக் கூடியது என்றதாகத் தேறி நின்றது. *அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா* என்கிற இந்த ஸூத்திரத்திற்கு இவ்வளவே விஷயமாயிருக்க, இங்கு ஸ்ரீபாஷ்யம் மிக மிக வளர்ந்திருக்கின்றதே; அவ்வளவு விரிவுக்கு விஷயமென்ன? என்று பலர் அறிய விரும்பக் கூடும். கேண்மின், இந்த ஸூத்ரத்தில் மூன்றே பதங்கள் உள்ளன. (அத) என்கிற முதல் பதத்திற்கு 'அதற்குப் பிறகு' என்று அர்த்தம். 'எதற்குப் பிறகு? என்று கேள்வி உடனே உண்டாகின்றது. 'கர்மவிசாரம் செய்து முடிந்த பிறகு' என்று நாம் அர்த்தம் சொன்னோம். பிறர் இங்ஙனே அர்த்தம் கொள்ளாமல் வேறு அர்த்தம் கொள்ளுகின்றனர். ஸர்தந ஸம்பத்தியின் ஆநந்தர்யமே அதசப்தார்த்தமென்று சங்கர பாஷ்யத்திலுள்ளது. அது பொருந்தாதென்று மறுக்க அவசியம் ஏற்பட்டது. ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைப்பற்றிப் பிறர் கூறுவதும் அவசியம் மறுக்கவேண்டியதாயிற்று. இவ்விரண்டு விஷயங்களில் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகப் பல பல விஷயங்கள் பெருகினபடியால் இவ்விடத்து ஸ்ரீபாஷ்யம் மிக வளர்ந்தது. அவ்விரிவு இங்கு வேண்டாவென்று விடுக்கப்பட்டது. ஸூத்ரத்தின்மேல் இங்குத் தோன்றியுள்ள பூர்வபக்ஷத்தையும ஸித்தாந்தத்தையும் ஸாரமாக வுணர்த்துகிறோம், உணர்க.

16. இவ்வதிகரணத்தின் பூர்வபக்ஷம் வருமாறு:—கர்ம மீமாம்ஸையில் அர்த்தவாதாதிகரணத்தில் "ஆம்நாயஸ்ய க்ரியார்த்தத்வாத் ஆநர்த்தக்யம் அததர்த்தாநாம் தஸ்மாதநித்யமுச்யதே" என்கிற வொரு ஸூத்திரத்தினால் ஒரு பூர்வபக்ஷம் கிளப்பப்பட்டது; அதாவது—வேத ஸாமாந்யமும் ஏதேனுமொருகார்யத்தைச் செய்யவேண்டியதாக வுணர்த்தித் தீரவேண்டிய நிர்ப்பந்தமுடையது; அதைச் செய் இதைச் செய் என்று கர்த்தவ்யார்த்தங்களை நியமேந போதிப்பதே வேதங்களின் க்ருத்யம். அர்த்தவாத ரூபங்களான வேறு வாக்யங்களானவை கர்த்தவ்யார்த்த மொன்றையும் போதிக்காமையினாலே அப்படிப்பட்ட வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்க மாட்டாது. (இதைச் சிறிது விவரிப்போம்-) "வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாம:" என்பது ஒரு வேத வாக்யம். இதில் ஒரு கருமம் கர்த்தவ்யமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடுத்த வாக்யம் 'வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா' என்பது. முன் சொன்ன கருமத்தில் ஆராத்யமான வாயுதேவதையின் ஒரு பெருமையைப் புகழ்ந்து கூறுவது இந்தவாக்யம். "வாயு மிகவும் சீக்கிரமாகப் பலனளிக்க வல்ல தேவதை" என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். இப்படிப்பட்ட வாக்யங்களுக்கு அர்த்தவாத வாக்யமென்று பெயர். இவற்

றில் கர்மவிதி ஒன்றுமில்லாமையால் இவை விதிவாக்யங்களல்ல. விதிவாக்யமாயி ருந்து கொண்டே ப்ராமாண்யம் பெறமாட்டா—என்கிற பூர்வபக்ஷம் * ஆம்நாயஸ்யேதி ஸூத்ரத்தினல் கிளப்பப் பட்டது. பிறகு "விதிநாது ஏகவாக்யத்வாத் ஸ்துத்யர்த்தேந விதீநாம் ஸ்யு:" என்கிற ஸூத்ரத்தினுல் இதற்குப் பரிஹாரம் சொல்லப்பட்டது. எங்ஙனே யென்னில், அர்த்தவாத வாக்யங்கள் ஒரு காரியத்தைச் செய்யும்படி விதிக்காமற் போனாலும் ஸமீபத்திலுள்ள விதிவாக்யத்தில் விதிக்கப்பட்டதொரு க்ரியையில் அந்வயிக்கின்ற புகழ்ச்சியைத் தெரிவிப்பதனுல் அந்த விதிவாக்யத்தோடுகூட ஏக வாக்யமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறத் தட்டில்லை யென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது ஜைமினி மஹர்ஷியால். ஆக, விதி வாக்கியங்களுக்கோ அவற்றுக்கு சேஷ பூதங்களான வாக்யங்களுக்கோ ப்ராமாண்ய முண்டே யல்லது வேறு வகையான வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் கிடையாது. உலகத்திலும் முதன் முதலாகச் சிறுவர்களுக்கு வ்ருத்த வ்யவஹாரத்தினுலேயே சக்தி க்ரஹண முண்டாகிறது. [சக்திக்ரஹணமாவது —இன்ன பதத்திற்கு இன்னது அர்த்தமென்கிற வுணர்ச்சி.] வ்யுத்பந்நனை வொருவன் வேறொரு வ்யுத்பந்நனை நோக்கி 'காம் ஆநய' என்கிறான். அதைக் கேட்ட அவன் ஒரு கோவைக் கொண்டு போகிறான். மறுபடியும் அவன் "காம் நய, அச்வம் ஆநய" என்கிறான். அதைக்கேட்ட அந்த வ்யுத்பந்நன் கோவைக் கொண்டுபோய்க் கட்டிவிட்டுக் குதிரையைக் கொண்டுவருகிறான். இவற்றைக் கண்டு கொண்டிருந்த வொரு சிறுவன் (காம்) என்றதற்கு இன்னது பொருள், (ஆநய) என்றதற்கு இன்னது பொருள், (நய) என்றதற்கு இன்னது பொருள்; அச்வமென்றதற்கு இன்னது பொருளென்று அங்கு நடந்த காரியங்களினுல் தெரிந்துகொள்ளுகிறான். 'கோ' பதமானது கொண்டுவருதல் கொண்டுபோதல் என்கிற இரண்டு க்ரியைகளில் அந்வயிக்கின்ற வஸ்துவை போதிப்பதனுலே பசுவைச்சொல்லுகின்றது, ஆநய என்கிற பதம் கொண்டுவருவதாகிற க்ரியையைச் சொல்லுமது என்றிப்படி அந்தந்த பதங்களுக்கு சக்தியை க்ரஹிக்கின்றான், எங்கும் இப்படிப்பட்ட வ்யவஹாரங்களினுலேயே அவ்வோ பதங்களுக்கு அவ்வோ அர்த்தங்களில் சக்தி க்ரஹண முண்டாகிறது. ஆகவே இப்படிப்பட்ட வ்யவஹாரங்களெல்லாம் ஏதேனுமொரு கார்யார்த்த பரங்களாகவே காணப்படுதலால் உலகில் எல்லாப் பதங்களும் யத்கிஞ்சித் கர்த்தவ்யார்த்த பரங்களே யென்று நிச்சயிக்கிறான். ஆக இப்படிப்பட்ட வ்யுத்பத்திக்கு இணங்க எல்லாப் பதங்களும் கார்யார்த்தபரங்களே. இப்படி லௌகிக பதங்கள் கார்ய பரங்களென்று தேறினுல் 'ய ஏவ லௌகிகா: த ஏவ வைதிகா:' என்கிற ந்யாயத்தாலே வைதிக பதங்களும் கார்ய பரங்களேயாகும். (கார்ய பரங்களான வாக்யங்களுக்கே ப்ராமாண்யமுண்டு என்றபடி.) ஏவஞ்ச, கார்ய ரூபமல்லாத பரப்ரஹ்மத்தினிடத்தில் வேதாந்த வாக்யங்களுக்குத் தாத்பர்யமிருக்க முடியாமையினுலே வேதாந்த விசார ரூபமான ப்ரஹ்ம விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதன்று—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாயிற்று.

17. இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு;—சிறுவர்களுக்கு முதல் வ்யுத்பத்தி வ்ருத்த வ்யவஹாரத்தினுலேயே உண்டாகிறது என்பது பிசகு; இது எல்லாருடையவும் அநுபவத்திற்கு விருத்தமானது. உலகில் அவரவர்களுக்கு முதல்வ்யுத்பத்தி உண்டாகிற விதம் வேறு வகையாகவே அநுபவ ஸித்தமாகவுள்ளது. எங்ஙனேயென்னில், தந்தை தாய் முதலியவர்கள் தம்தம் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தியை யுண்டுபண்ண வேண்டி கண்ணிற் காணும் பல பல பொருள்களை விரலால் சுட்டிக்காட்டி 'இதோ சந்திரன், இதோ கிளி, இதோ குதிரை, இதோ மாமா' என்றிப்படி ப்ரயோகித்து வருகிறார்கள். சிசுக்களும் பூர்வஜன்ம வாஸனையினுல் காலக்ரமேண அவ்வோ பதங்களுக்கும் அவ்வோ அர்த்தங்களுக்குமுள்ள ஸம்பந்தத்தைத் திடமாக வுணர்ந்து வ்யுத்பத்தி பெறுகின்றன. ஒரு கார்யத்தில் அந்வயித்த வஸ்துவிலேயே முதன் முதலாக சக்தி க்ரஹணமுண்டாகிறதென்றதற்கு முரணுக ஒரு கார்யத்திலும் அந்வயியாத வஸ்துவிலேயே முதன் முதலாகப் பதங்களுக்கு சக்திக்ரஹண முண்டாகின்றதென்று ஸமர்த்திக்கப்பட்டது.

18. கார்யபரமான வாக்கியத்திலிருந்தே சக்திக்ரஹண முண்டாகிறதென்பதும் மிகவும் தவறு. 'தேவதத்தா! உனக்குப் பிள்ளை பிறந்தது' என்பதாக ஒரு வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இது ஸித்தார்த்தபரமான வாக்கியமே யொழிய, 'காமாநய, காம் நய' இத்யாதி வாக்யங்கள்போலே கார்யபரவாக்கியமன்று. இந்த வாக்கியத்தினாலும் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தி விளையக் காணாநின்றோம். தேவதத்தனுக்குப் பிள்ளை பிறந்தவுடனே வேறோரிடத்திலிருந்த அவனுக்கு இதைத் தெரிவிப்பதற்காக ஏவப்பட்டவொருவன் 'தேவதத்த! புத்ரஸ்தே ஜாதঃ' எனகிறான். அவ்யுத்பந்நனானவொருவன், தேவதத்தனுடைய க்ருஹத்தில் அவனுக்குப் பிள்ளை பிறந்ததையும் அதைத் தெரிவிப்பதற்காக வொருவன் ஏவப்பட்டதையும் அவன் கூறினதைக் கேட்டு தேவதத்தனுக்கு முகவிகாஸமுண்டானதையும் நோக்கி "புத்ரஸ்தே ஜாதঃ" என்ற வாக்கியத்திற்கு இன்னது பொருளென்று உணரப்பெறுகிறான். ஆகவே கார்யபரமான வாக்கியத்திலிருந்தே சக்திக்ரஹண மென்கிற நியதி இல்லையென்றதாயிற்று. சில விடங்களில் ஸித்தபரமான வாக்யத்திலிருந்தும் கார்ய அநந்விதவஸ்துக்களில் சக்திக்ரஹண முண்டாகிறது; சிலவிடங்களில் கார்யபர வாக்கியத்திலிருந்தும் உண்டாகிறது என்று லோகாநுபவத்தினால் ஸித்திக்கிறபடியால் ப்ராபாகரர்கள் ஸகலபதங்களும் கார்யார்த்த பரங்களென்று கூறுவது யுக்தியற்றதென்று தேறிற்று. ஆகவே வாக்கியங்களுக்கு ஸித்தரூபமான ப்ரஹ்மத்தில் தாத்பர்யம் ஸம்பவிக்கலாமாகையாலே தத்விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதே யென்று ஸித்தாந்தமானதாக முடிந்தது.

19. இங்கு இப்படிப்பட்ட பூர்வபக்ஷம் தோன்றி இதற்குப் பரிஹாரம் செய்வதாகிற விஷயம் அந்த ஸூத்ரத்தில் எங்ஙனம் கிடைக்கிறதென்று கேள்வி தோன்றும். கார்யத்தில் அந்வயியாத ப்ரஹ்மமாகிற ஸித்தவஸ்துவை ஜிஜ்ஞாஸ்யமாக இங்குக் கூறியிருப்பதனால் இதிலிருந்து இந்தப் பூர்வ பக்ஷஸித்தாந்தங்கள் நிர்ணயிக்கப்படக் குறையில்லை. வேதாந்த வாக்கியங்களெல்லாம் கார்யபரங்களாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுமேயல்லது ஸித்தபரங்களாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறமாட்டாதென்கிற வாதம் ஸமஞ்ஜஸமா யிருந்தாலன்றோ வேதாந்த வாக்யங்களினால் ஸித்தரூபமான ப்ரஹ்மத்தை விசாரிப்பது கூடாதென்று சொல்லநேரும்.

20. முதலில் நாமெடுத்துக்காட்டிய பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்களிரண்டினால் தேறினவர்த்தம் இப்போது விரோதிக்கிறதாக இனி நினைக்கக்கூடும். கார்யபரங்களல்லாத ஸித்தபர வாக்கியங்களுக்கு ஸ்வாதந்த்ர்யேண ப்ராமாண்யம் அஸம்பாவித மென்றன்றோ அங்கு ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது; அதற்கு முரணாக இப்போது முடிந்ததே என்று சங்கிக்க நேரும். இந்த சங்கை வேண்டா. எல்லா வேதவாக்கியங்களும் கார்யபரங்களாய்க்கொண்டே ப்ராமாண்யம் பெறுமென்று பூர்வபக்ஷி சொன்னதை அப்படியே ஒப்புக்கொண்டு அப்யுபகம்யவாத முறையில் பரிஹாரம் காட்டினார் ஜைமிநிமஹர்ஷி. அதுவே அவருடைய அபிப்ராயமென்பது கிடையாது. கார்யபரமல்லாத அர்த்தவாத வாக்கியங்களும் விதி சேஷமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுகின்றனவென்று சொன்ன வளவால் ஸித்தபர வாக்யங்களுக்கு ப்ராமாண்யமே கிடையாதென்று சொன்னபடியாகாது. ஆகவே இந்த ஸூத்ரத்தில் செய்யப்படுகிற ஸித்தாந்தமானது பூர்வ மீமாம்ஸா அர்த்தவாதாதிகரண ஸித்தாந்தத்திற்கு விருத்தமன்று என்றதாயிற்று.

21. இதில் (अथ अतः) என்கிற இரண்டு பதங்களினால் கர்ம விசாரத்திற்குப் பிறகு கர்மவிசாரம் முடிந்ததென்கிற காரணத்தாலேயே, ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கதென்று கிடைப்பதனால் ப்ரஹ்மவிசாரத்தைக் குறித்துக். கர்ம விசாரம் நியமேந பூர்வவ்ருத்தமென்று தேறுகின்றது. இதைப்பற்றியும் சிறிது விவரிக்கப்படுகிறது. வேதமோதின வொரு புருஷன் வேதவாக்யங்களில் கர்ம பலத்தைப் பற்றியும் ப்ரஹ்மஜ்ஞான பலத்தைப்பற்றியும் ஸ்திரமென்று சிலவிடங்களிலும் அஸ்திரமென்று சிலவிடங்களிலும் மேலெழுந்த வாரியாக வுணர்ந்து இவற்றில் எது உண்மையென்று நிர்ணயம்

தெரிந்துகொள்ள விரும்புகிருன். அந்த விருப்பத்தினுல் அதை நிர்ணயித்துத் தரக் கூடிய சாஸ்த்ரங்களில் ப்ரவர்த்திக்கிருன். கர்மபலனைப் பற்றின வுண்மையை நிச்சயித் துத் தரவல்ல சாஸ்த்ரங்களில் முந்துறமுன்னம் ப்ரவர்த்திக்கிருன். அநாதிவாஸனையி ஞல் கருமங்களைச்செய்வது எளிதென்று பொதுவாகத் தோன்றியிருக்கும். ப்ரஹ்மஜ்ஞானத்தில் அப்யாஸமில்லாமையினுலே அது துஷ்கரமென்றும் தோன்றியிருக்கும். ஆகவே எளிதான உபாயத்தினுல் அபிமதம் கைபுகுவதாயிருக்க அரிதான உபாயத்தில் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்க மாட்டாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞானத்தின் பலனைப்பற்றி நிர் ணயிக்க வேணுமென்கிற விருப்பம் தடைபட்டு, கருமபலனைப் பற்றி நிர்ணயிக்கவேணு மென்கிற விருப்பமே தலையெடுத்திருக்கும். இங்ஙனம் முன்னம் கருமவிசாரம் செய்த வளவில் கருமபலன்கள் அஸ்திரம் என்கிற நிச்சயமுண்டாகிறது. இப்படி நிச்சயமுண் டானவளவில், கர்ம விசாரேச்சை தொலைந்ததாகிறது. இந்த கர்ம விசாரேச்சையே முன்பு ப்ரஹ்ம விசாரேச்சைக்கு இடையூறயிருந்ததனுல் இந்த ப்ரதிபந்தகம் தொலை யவே ப்ரஹ்ம விசாரத்தில் இச்சையும் அதில் ப்ரவ்ருத்தியும் அடுத்தபடியாக உண்டா கிறது. எனவே, ப்ரஹ்ம விசாரத்தைக் குறித்து கர்ம விசாரம் நியமேந அபேக்ஷித மென்றதாகிறது. இதுவே பூர்வ வ்ருத்தமாக இருக்கத் தக்கதாதலால் (அத அத:) என்ற பதங்களுக்குப் பதவுரையில் நாம் கூறிய பொருளே பொருத்த முடைத்தென்ற தாயிற்று. இஜ்ஜிஜ்ஞாஸாதிகரணார்த்தஸாரம் இவ்வளவு போதும்.

(இனி, இரண்டாவது—ஜந்மாத்யதிகரணம்.)

22. உலகில் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேணுமானுல் லக்ஷணத்தை முன் னிட்டே தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படியே பரப்ரஹ்மத்தைத் தெரிந்து கொள்ளவேணுமானுலும் ஒருலக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்துகொள்ளவேண்டும். நாம் கண்ணுல் காணக்கூடிய பொருள்களுக்கே லக்ஷணம் கூறமுடியுமேயல்லது கண்ணுக் குப் புலப்படாத பொருளுக்கு லக்ஷணம் கூறமுடியாது. பரப்ரஹ்மமோ கண்ணுக்குப் புலப்படாததே யன்றிப் புலப்படுமதன்று. ஆகவே அதற்கு ஒரு லக்ஷணம் கூற இய லாதபோது அது தெரிந்துகொள்ள முடியாதென்று தேறிவிட்டபடியால் அந்த பரப்ரஹ் மத்தைப் பற்றின விசாரம் எப்படி செய்ய ப்ராப்தமாகும்? என்று ஆக்ஷேபம் தோன்ற, அவ்வாக்ஷேபத்தைப் பரிஹரிக்க இந்த அதிகரணம் எழுகின்றது. இவ்வதிகரணத்தின் ஸூத்ரம் * ஜந்மாத்யஸ்ய யத: * என்பது. ஜந்மாதி, அஸ்ய, யத: என்று மூன்றுபதமாக வுள்ளது இந்த ஸூத்ரம். அஸ்ய—கண்ணுல் காணப்படுகிற இந்த சேதந மிச்ரமான பிரபஞ்சத்திற்கு, ஜன்மாதி—உற்பத்தி ஸ்திதி ப்ரளயங்கள், யத:—எந்த வஸ்துவி னிடத்தினின்று ஆகின்றனவோ, [அதுதான் பரப்ரஹ்மம்] என்பதாக ஸூத்திரத்தின் பொருள். தைத்திரீயோபநிஷத்தில் ப்ருகுவல்லியென்னும் ப்ரகரணத்தி லுள்ளதான "யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி, தத் விஜிஜ்ஞாஸஸ்வ, தத் ப்ரஹ்மேதி" என்னும் வாக்கியமானது பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந் மாதி காரணத்வரூபமான லக்ஷணத்தைச் சொல்லி யிருக்கின்றது. உலகில் நாம் ஆடு மாடுகளுக்கு ஒவ்வொரு லக்ஷணத்தைக் கொண்டு இதர பேதத்தை எப்படி நிச்சயிக் கிருேமோ அப்படியே ப்ரஹ்மம் கண்ணுக்குப் புலப்படாததாயிருந்தாலுங் கூட ஜகஜ் ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைக் கொண்டு சேதநா சேதநங்களிற் காட்டில் வேறுபட்டதென்று நிச்சயிக்க முடியுமாதலால் அப்படிப் பட்ட ப்ரஹ்மத்தைப் பற்றின விசாரம் கூடும் என்றதாயிற்று.

23. இங்கே பூர்வபக்ஷம்:—ப்ரஹ்மத்திற்கு ஜந்ம காரணத்வம் முதலானவை லக்ஷணமாக ஸம்பவிக்கமாட்டாதென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது. "யத: இமாநி ஜாயந்தே" இத்தியாதியாக எடுத்துக்காட்டின உபநிஷத் வாக்யத்தில் அந்வய க்ரமம் எப்படி காணவேணு மென்ருல், "யத இமாநி பூதாநி ஜாயந்தே தத் ப்ரஹ்ம; யேந ஜாதாநி

ஜீவந்தி தத் ப்ரஹ்ம; யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி தத் ப்ரஹ்ம" என்று மூன்று வாக்யங்களாகப் பிரித்து அந்வயங் கொண்டு ஜந்மகாரணத்வம் ஒரு லக்ஷணமென்றும் ஸ்திதி காரணத்வம் மற்றொரு லக்ஷணமென்றும் லயகாரணத்வம் வேறொரு லக்ஷணமென்றும் ஆக வ்யாவர்த்தக லக்ஷணங்கள் மூன்று அங்கீகரிக்க வேண்டியதாகின்றது. இப்படியாகுமளவில், ஒரே ப்ரஹ்மம் என்றல்லாமல் பல ப்ரஹ்மங்கள் என்பதாகத்தேறும். வ்யாவர்த்தகங்கள் பலவானால் வ்யாவர்த்யமும் பலவாக வேண்டுகையாலே.

24. இப்படி யொரு நிர்ப்பந்த முண்டோ? தேவதத்தன் கறுத்தவனாயும் பருத்தவனாயும் யுவாவாயும் செந்தாமரைக் கண்ணனாயு மிரா நின்றான் என்று ஒருவர் சொன்னால் கறுப்பு முதலிய வ்யாவர்த்தகங்கள் பலவாயிருப்பது கொண்டு வ்யாவர்த்யனான தேவதத்தனும் பல வ்யக்திகளாகத் தேறிவிடுவனோ? ப்ரத்யக்ஷமாக ஒரு தேவதத்தனையே நாம் காண்கிறோம். அவ்வொரு வ்யக்தியினிடத்தில் கருமை, பருமை முதலான பலவும் கூடியிருக்கக்காண்கிறோம். இதுபோல ஒரு ப்ரஹ்மத்தினிடத்திலே ஜந்ம காரணத்வம் முதலானவை பலவும் கூடியிக்கக் குறையில்லையே. இவற்றால் ப்ரஹ்ம வ்யக்தியில் பஹுத்வத்தை எப்படி ஆபத்தி பண்ண முடியும்? என்று மத்யே சங்கை தோன்றும். இதற்கு ஸமாதானம். கருமை பருமை முதலிய பலவற்றால் தேவதத்த வ்யக்தியில் பன்மை வந்துவிட மாட்டாதென்பது வாஸ்தவமே, தேவதத்தன் கண்ணுக்குப் புலப்படுமவனாதலால் அவ்விஷயம் வேறு, ப்ரஹ்மம் அப்படி ப்ரத்யக்ஷமன்றே. அதுவோ அப்ரத்யக்ஷமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் ஒன்றிலேயே கூடுமென்று க்ரஹிப்பிக்கவல்ல பிரமாண மெதுவும் புலப்படவில்லை. லக்ஷணங்கள் எல்லாம் இதர பேதத்தை ஸாதித்துக் கொடுக்குமவை என்பது உத்ஸர்க்கத: ப்ராப்தமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வமென்னு மிந்த லக்ஷணங்கள் இதர பேதத்தை [வ்யாவ்ருத்தியை] ஸாதித்துக் கொடுக்குமளவில் இதற்கு அபவாதம் யாதொன்று மில்லாமையினாலே, ஜந்மகாரணத்வமாகிற லக்ஷணமானது என்ன செய்யுமென்றால், தன்னைக் கொண்டு லக்ஷணீயமான ப்ரஹ்மத்திற்கு ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் லய காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே ஸ்திதி காரணத்வரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு-ஜந்மகாரண பூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் லயகாரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே லய காரணத்வ ரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு ஜந்மகாரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். ஆகவிப்படி லக்ஷண பேதங்களினால் ப்ரஹ்ம பஹுத்வம் தேறியே தீரும். இதற்காகப் பல லக்ஷணங்களைக் கொள்ளாமல் "ஜந்மகாரணத்வே ஸதி ஸ்திதி காரணத்வே ஸதி லய காரணத்வம் பரஹ்ம லக்ஷணம்" என்று கொள்ளுகிறோமென்னில்; இவற்றுள் ஒவ்வொன்றே லக்ஷணமாகப் போருமாதலால் மற்ற விசேஷணங்கள் வ்யர்த்தமாக வேண்டிவரும். மேலும் ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் விருத்தங்களாகையாலே ஓரிடத்தில் இவை கூடியிருக்கவும் மாட்டா.

25. இதற்குமேல் ஒன்று சொல்லலாம். [அதோ பக்ஷி உட்கார்ந்து கொண்டிருக்கிறதே; இவ்விடந்தான் தேவதத்தனுடைய கழனி] என்று ஒருவன் சொன்னால், தேவதத்தனுடைய கழனிக்கு பக்ஷியின் ஸம்பந்தத்தை லக்ஷணமாகச் சொன்னதாக ஆகிறது, இப்படிப்பட்ட லக்ஷணத்தினால் பக்ஷி யுறையுமிடமான கழனியில் தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்படுகிறது. அதுபோலவே இங்கும் ஜந்ம காரணத்வம் ஸ்திதிகாரணத்வம் லயகாரணத்வம் ஆகிற மூன்றையும் ஜ்ஞாபக லக்ஷணங்களாகக் கொண்டு இவற்றால் ஒரே வஸ்து ப்ரஹ்ம பதார்த்தமாக ஏற்படுகிறது-என்னலாம்.

26. இதுவும் பொருந்தாது. த்ருஷ்டாந்தத்தில், கழனியென்கிறவொரு வஸ்து ஏற்கெனவே அறியப்பட்டிருந்தது. அப்படி அறியப்பட்டிருந்தவதில் பக்ஷிவிசேஷத்

தின் ஸம்பந்தத்தை யிட்டு தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்பட்டது. அதுபோல இங்கு தெரிவிக்கப்பட வேண்டிய ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்ததொரு தன்மை சொல்லித் தீரவேண்டும். அதுவோ ஒன்றும் சொல்லமுடியாததாயிருக்கின்றது. ஆகவே ஜந்மகாரணத்வம் முதலியவற்றுக்கு [பக்ஷிவிசேஷஸம்பந்தாதிவத்] ஜ்ஞாபகத்வமும் ஸம்பவிக்கமாட்டாது. ஏன்? ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்ததொரு தன்மை சொல்லமுடியாதா என்ன? நன்றாகச் சொல்லலாமே; "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸத்யத்வம் முதலானவையே முன்னமறிந்த தன்மைகள் என்னக் கூடாதோ வென்னில்; அங்கும் இந்த தோஷம் ஸமானமேயாகும். ஸத்யத்வாதிகள் ஜ்ஞாபகமாகும் போது ஏற்கெனவே யறிந்த தன்மை யொன்று சொல்லியாகவேண்டும். ஜந்மகாரணத்வாதிகளைச் சொல்லுகிறோமென்னவேணும்; அதைத் தெரிந்து கொள்ளாமல் ப்ரஹ்ம பதார்த்தம் தெரிவிக்க முடியாதாதலால் அந்யோந்யாச்ரயம் அபரிஹார்யமாகும். ஆகவே ஜந்மகாரணத்வாதிகள் லக்ஷணமாகப் பொருந்தமாட்டா வென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது.

27. பரப்ரஹ்மம் ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமல்லாமையாலே அதற்கு ஒரு லக்ஷணமும் சொல்ல முடியாததாலும், லக்ஷணத்தைக் கொண்டே எந்த வஸ்துவையும் அறியவேண்டுமாதலாலும், லக்ஷணத்தின் அஸம்பவத்தினால் அறியமுடியாததான இந்தப் பரப்ரஹ்மத்தைப் பற்றி விசாரம் செய்வதெப்படி? என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரித்துக்கொண்டு 'ஜந்மாத்யஸ்ய யத:" என்கிற இரண்டாவது ஸூத்ரம் தோன்றியுள்ளதென்று கூறி பூர்வபக்ஷத்தையும் விவரித்தோம். இனி ஸித்தாந்தம் வருமாறு:—

28. ஒரு வஸ்துவுக்கு ஒருலக்ஷணம் சொன்னோமானால் அந்த லக்ஷணமானது "மற்ற வஸ்துக்களிற் காட்டிலும் இந்த வஸ்து வேறுபட்டது" என்பதை நன்கு காட்டிக் கொடுக்குமென்று சொன்னோம். அப்படி வேறுபாட்டைக் காட்டுவதென்றால் என்ன? என்பதைச் சிறிது தெளிவாகத் தெரிந்துகொள்ள வேணும். விசேஷணங்களைக் கொண்டு நாம் வேறுபாட்டை யறியவேணும். விசேஷ்யத்தில் ஏதோ வொரு தர்மம் இருப்பதாக விசேஷணம் காட்டும்; அந்த தர்மத்திற் காட்டிலும் வேறுபட்டதான எந்த தர்மமும் அதில் இருக்கமாட்டா தென்று அதனால் தெரிந்து கொள்ளுகிறோமா? அல்லது அந்த தர்மத்திற்கு விருத்தமான வேறெந்த தர்மமும் அதில் இருக்கமாட்டா தென்று தெரிந்து கொள்ளுகிறோமா? என்று பரிசீலிக்க வேணும். விசேஷணத்தினாலேற்பட்ட தர்மம் தவிர வேறு எந்த தர்மமும் அதில் [விசேஷ்யத்தில்] இருக்கமாட்டா தென்று தெரிந்துகொள்ளுகிறோமென்று தேறுமாகில் முற்கூறிய பூர்வபக்ஷம் ஊர்ஜிதமாகும். உண்மையோ வென்னில் அப்படியில்லை. ஒரு விசேஷணத்தினாலே விசேஷ்யத்தில் ஒரு தர்மம் காட்டப்பட்டதேயானால் அதற்கு எதிரிடையான வேறு தர்மம் அதில் இருக்கமாட்டாதென்று நாம் தெரிந்து கொள்ளலாமே யன்றி அவிருத்தமான வேறெந்த தர்மமும் அதிலிருக்கமாட்டாதென்று நாம் தெரிந்துகொள்ள இயலாது. (உதாரணம்.) "நீலோ வ்ருஷப:" [கறுத்த எருது] என்கிற வொரு வாக்யத்தை யெடுத்துக் கொள்வோம். இதில் கருமை விசேஷணம். எருது விசேஷ்யம். நீல: என்கிற விசேஷணமானது இதர வ்யாவ்ருத்தியை [வேறுபாட்டை]க் காட்டுவதற்காகவே ப்ரயோகிக்கப் பட்டது. கறுப்புநிறத்திற்கு விருத்தமான வெளுப்பு சிவப்பு முதலிய நிறங்கள் அந்த எருதினிடத்தில் இல்லையென்று இதனால் நாம் தெரிந்துகொள்ளலாமே யல்லது இதற்கு அவிருத்தமான த்ரவ்யத்வம் முதலிய தர்மங்களும் கூட அதில் இல்லையென்று நாம் தெரிந்துகொள்ளமுடியாது. லோகாநுபவம் அப்படி யில்லை. ஒரு விசேஷ்யத்தில் பல பல தர்மங்கள் இருக்கலாம். விசேஷணத்தினால் அல்லது விசேஷணங்களினால் எந்தெந்த தர்மங்களின் ஸத்பாவம் ஏற்படுமோ அந்த தர்மங்கள் தவிர வேறு எந்த தர்மமும் அந்த விசேஷ்யத்தில் கிடையாதென்கிற ப்ரதிபத்தி ஒரு நாளும் ஒருவற்கும் உண்டாகமாட்டாது. அந்த தர்மங்களோடு முரண்படும்படியான தர்மம் இருக்கமாட்டா தென்கிற ப்ரதிபத்தியே விளையும். "யுவா நீலோ வாமந: பங்குச்ச தேவ

த்த:" என்றால் யுவாவாயும் கறுத்தவனாயும் குள்ளனாயும் நொண்டியாயும் தேவதத்தனிருக்கிறான் என்று பொருள்படுகிறது. இதில் யுவா என்கிற விசேஷணமானது யௌவனமுடையவனென்று காட்டி, யௌவனமென்கிற அந்த தர்மத்திற்கு விருத்தமான இளமையும் முதுமையுமில்லாதவன் என்று காட்டுமேயல்லது அதற்கு அவிருத்தமான நீலத்வம் வாமநத்வம் முதலிய தர்மங்களுமில்லாதவன் என்று காட்டமாட்டாதன்றோ? இப்படி ஒவ்வொரு விசேஷணத்தையு மெடுத்துக்கொண்டு விமர்சித்தறிக.

29. விருத்தமான தர்மங்களும் ஏககாலத்தில் இருக்க முடியாதே யொழிய கால பேதத்தினால் அவையும் ஒரே வ்யக்தியினிடத்தில் இருக்கத் தடையில்லை. "நீலவஸ்த்ரதாரீ தேவதத்த:" என்றால் ஒருகாலத்தில் கறுப்புத் துணியை யணிந்தவனாயும் மற்றொரு காலத்தில் வெளுப்புத்துணியை யணிந்தவனாயு மிருப்பதில் விரோதமில்லாமையாலே நீல வஸ்த்ரதாரீ என்கிற இந்த விசேஷணமானது காலாந்தரத்தில் [அடுத்த க்ஷணத்திலேயே] ஸம்பவிக்கக்கூடிய ச்வேத வஸ்த்ரதாரணத்தைத் தவிர்க்கமாட்டாதன்றோ. விசேஷணங்களைப் பற்றி இங்ஙனே தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள் பலவுள.

30 ப்ரகிருதத்தில், ஜந்மகாரணத்வம் ஸ்திதிகாரணத்வம் லயகாரணத்வமென்னுமிவை காலபேதத்தினால் ஒரு வ்யக்தியினிடத்திலேயே ஒன்று சேர்ந்திருக்கக் கூடியவை யாதலால் அவிருத்தங்களேயாகும். விலக்ஷண சக்தி யுக்தமான பர ப்ரஹ்மத்தினிடத்தில் ஏக காலத்திலேயும் இவை கூடும். ஆகவே ஜந்மகாரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் பரப்ரஹ்மத்திற்கு பஹுத்வபத்தியென்பதில்லை. பர ப்ரஹ்மம் க்ஷேத்ரஜ்ஞர்களின் கருமங்களுக்குத் தக்கபடி ஸ்ருஷ்டிப்பதும் பிரளயம் செய்யவேண்டிய காலத்தில் ஸம்ஹரிப்பதும் செய்கிறது. உலகில் உழவனானவன் விதை விதைக்க வேண்டிய காலத்தில் அதை விதைப்பதும் அறுக்கவேண்டிய காலத்தில் அறுப்பதும் செய்வது போல் இதனைக் கொள்க. அன்றியும், உத்தர நாராயணானுவாகம் முதலானவற்றில் லக்ஷ்மீபதித்வம் முதலிய அஸாதாரண சிஹ்னங்களினால் ப்ரதிபத்திக்கு விஷயமான வஸ்துவானது ஜந்ம காரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் ப்ரஹ்ம பதார்த்தமாக ஜ்ஞாபிக்கப்படுகிறதென்றும் கொள்ளக் குறையில்லாமையாலே இரண்டாவது பக்ஷத்திலும் தோஷமில்லை. [முன்னே விவரிக்கப்பட்ட பூர்வபக்ஷத்தை மீண்டு வாசிப்பது.] ஏவஞ்ச, ஜகஜ்ஜந்மாதி காரணத்வமானது விசேஷணமாகவும் உபலக்ஷணமாகவும் ப்ரஹ்மலக்ஷணமாவதற்கு யாதொரு தடையுமில்லை யென்று தேறிற்று. இன்னமும் இங்கு விரிவாகத் தெரிவிக்க வேண்டுமவை பலவுண்டு. அவை சாஸ்த்ரஜ்ஞானிகளுக்கே க்ரஹிக்கவும் ரஸிக்கவுங் கூடியவையாதலால் இங்கு இவ்வளவோடு நிறுத்தப் படுகிறது.

31. இனி, மூன்றாவதான சாஸ்த்ரயோநித்வாதிகரணம் பற்றிப் பேசுவோம். ஜந்மாத்யதிகரணமென்கிற கீழதிகரணத்தில் பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜன்மாதி காரணத்வம் லக்ஷணமென்று தேறிற்று. இப்படிப்பட்ட லக்ஷணத்தோடு கூடிய பரப்ரஹ்மமானது ப்ரத்யக்ஷப்ரமாணத்தினால் தெரிந்துகொள்ளப்படாமற் போனாலும் அநுமானப்ரமாணஸித்தமாகின்ற அந்தப்ரஹ்மத்தை வேதாந்தவாக்யங்களினால் விசாரிக்கவேண்டிய அவச்யமில்லை என்றொரு ஆக்ஷேபந்தோன்ற, அதற்குப் பரிஹாரமாக இந்த அதிகரணம் அவதரிக்கின்றது. இவ்வதிகரணத்திற்கு ஸூத்ரம் சாஸ்த்ரயோநித்வாத் என்பது. சாஸ்த்ரத்தை யோநியாகக் கொண்டபடியாலே-என்பது ஸூத்ரத்தின் பொருள். யோநியாவது காரணம்; அறிவதற்குக்காரணம் என்கிற விவக்ஷையினால் இங்கு யோநிசப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது—ப்ரமாணம் என்றபடி. சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டபடியாலே என்றதாயிற்று. * அப்பக்ஷோ வாயுபக்ஷ: * என்னுமிடங்களில் 'தீர்த்தத்தைக் குடிப்பவன், வாயுவை பக்ஷிப்பவன்' என்று சப்தார்த்தமானாலும் "அஸதி பாதகே ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்" என்கிற நியாயத்தினால் "தீர்த்த மொன்றையே குடிப்பவன், வாயுவைமாத்திரமே பக்ஷிப்பவன்" என்று பொருள்தேறுவதுபோல,

இங்கும் "சாஸ்த்ரமொன்றையே ப்ரமாணமாகக் கொண்டபடியாலே" என்றதாகப் பொருள்தேறும். ஆகவே "சாஸ்த்ரமேவ யோநி: (ப்ரமாணம்) யஸ்ய தத்—சாஸ்த்ர யோநி; தஸ்ய பாவ:— சாஸ்த்ரயோநித்வம்; தஸ்மாத்—சாஸ்த்ரயோநித்வாத்" என்று ஸமாஸம் கொள்ளப்பட்டதாயிற்று. பரப்ரஹ்மமானது அநுமாநத்தை ப்ரமாணமாகக் கொண்டதாகாமல் சாஸ்த்ரமொன்றையே ப்ரமாணமாகக் கொண்டதாகையினுல் அப்படிப்பட்ட (வேதாந்த) சாஸ்த்ரத்தினுல் பரப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டியது அவச்யமே என்பதாக ஸூத்ரத்தின் பொருள் முடிந்துநின்றது.

32. இங்குப் பூர்வபக்ஷம்:—"அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத்" என்பர் சாஸ்த்ர வித்துக்கள். வேறு எந்த ப்ரமாணத்தினுலும் ஏற்படாத விஷயத்தில்தான் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்குமென்றும், வேறு ஏதேனுமொரு ப்ரமாணத்தினுல் ப்ரஹ்மம் ஸித்தித்து விட்டால் அதில் சாஸ்த்ரம் ப்ரவர்த்தியாது என்றும் தேறுகின்றது. பரப்ரஹ்மமோ அநுமாந ப்ரமாணத்தினுல் ஸித்திக்கக்கூடியதாக இருக்கின்றது. எங்ஙனேயென்னில் "பூம்யங்குராதிகம் ஸகர்த்ருகம்—கார்யத்வாத்; கடவத்" என்பது அநுமாந சரீரம். உலகத்தில் நாம் காண்கிற எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவையுடையன; கர்த்தாவொருவனில்லாமல் எந்தப்பொருளும் உண்டாவதில்லை; வீடு பானை துணி முதலிய எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவை முன்னிட்டே உண்டானவை யென்பதை அறிகிருேம். இதனுல், கர்த்தாவொருவனில்லாமல் எந்தப்பொருளு முண்டாகாதென்கிற உறுதி தோன்றுகின்றது. உடனே மற்ருென்றும் கவனிக்கிருேம்; வீட்டைக் கட்டினவனுக ஒரு கர்த்தா நமக்குத் தெரியவந்தாலும் அந்த வீடு எந்த நிலத்தில் கட்டப்பட்டதோ அந்த நிலத்திற்கு எவன் கர்த்தா என்பது நமக்குத் தெரியவில்லை. வீடுகட்டக் கருவியாயிருக்கின்ற மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தா இன்னுனென்று அறிகின்றிலோம். பானையைச் செய்பவன் குயவனென்று காண்கிருேமாகுலும் அந்தப் பானைக்கு உபாதாநகாரணமான மண்ணைப் படைத்தவன் இன்னுனென்று அறிகின்றிலோம். துணிக்குக் கர்த்தா சேணியனென்று அறிகின்ருேமாகுலும் அதற்கு உபாதாந காரணமாகிய பஞ்சைப் படைத்தவன் இன்னுனென்று அறிகின்றிலோம். ஆனுல் கர்த்தாவொருவனில்லாமல் ஒரு காரியப்பொருளு முண்டாகாதாதலால் கீழ்ச்சொன்ன மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தாவொருவன் இருந்தே தீரவேண்டும். அவன்தான் ஈச்வரனென்பவன்—என்று இவ்விதமாக ஈச்வரனையறிவதானது அநுமான ப்ரமாணத்தினு லறிவதாகும். ஆக, இப்படிப்பட்ட அநுமாநமென்னும் பிரமாணத்தினுல் ஈச்வரன் ஸித்திக்கவே, இப்படி ப்ரமாணுந்தர ப்ராப்தமாய் விட்ட பரப்ரஹ்மத்தின் விஷயத்தில் சாஸ்த்ரமெனனும் ப்ரமாணம் ப்ரவர்த்திக்க மாட்டாதாதலால் [* அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத் * என்றன்ருே நியமமுள்ளது.], வேதாந்த சாஸ்த்ரமானது ஜகஜ்ஜந்மாதிகாரணபூதமான ப்ரஹ்மத்தினிடத்திலே ப்ரமாணமாக முடியாதாதலால் அந்த வேதாந்த சாஸ்த்ர விசாரரூபமான ப்ரஹ்மவிசாரம் செய்யத் தக்கதன்று—என்பதாகப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாயிற்று.

33. இதற்குமேல் ஸித்தாந்தம் வருமாறு;—அநுமானத்தினுல் ஒன்றை ஸாதிப்பதானுல் அது செவ்வனே ஸித்திக்கக்கூடிய விஷயமன்று. அநுமானத்தினுல் ஈச்வரனே ஜகத்கர்த்தாவாக ஸித்திக்கவேணுமென்கிற நியதியில்லை; ஏனென்னில்; விச்வாமித்ர முனிவர் தவவலிமையினுல் மிகுந்த பெருமைபெற்று நூதநஜகத்ஸ்ருஷ்டிபண்ணினுரென்பதை நாம் ஸ்ரீராமாயணுதிகளில் வாசிக்கின்ருேம். * அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி * இத்யாதி ச்லோகங்கள் பலர் அறிந்தனவே. அம்முனிவர் ஒரு ஜீவவ்யக்தியே யல்லது ஈச்வரனல்லர். இதனுல் ஜீவகோடியிலேயே அதிசயித்த சக்தி படைத்த சிலர்க்கு விசித்ரஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ண ஆற்றலுண்டு என்பது தேறுகிறபடியால், கீழே காட்டிய அநுமானத்தினுல் ஈச்வரனே ஜகஜ்ஜந்மாதி காரணபூதனுக ஸித்திக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. விலக்ஷணசக்தியுக்தனுன சேதநனே ஸ்ருஷ்டி கர்த்தாவாகத் தேறலாமாத

லால் அநுமாநம் ஈச்வர ஸாதனத்தில் சக்தியுடையதன்று; ஆகவே சாஸ்த்ரமே பர ப்ரஹ்மஸித்தியில் ப்ரபலப்ரமாணமாகக்கடவது. அப்படிப்பட்ட சாஸ்த்ரம் வேதாந்த சாஸ்த்ரமே. அதைக்கொண்டு ப்ரஹ்ம விசாரம் செய்வது நன்ருகப் பொருந்தும் என்றதாயிற்று.

34. இனி நான்காவதான ஸமந்வயாதிகரணம்பற்றிப் பேசுவோம். பரப்ரஹ்மமானது சாஸ்த்ரம் தவிர வேறொரு பிரமாணத்திஞல்ப்ராப்தமாகக் கூடியதன்று என்றே கொண்டாலும் அந்த ப்ரஹ்மமானது ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு விஷயமல்லாமையிஞல் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தை ப்ரதிபாதநம் செய்வதில் பலனென்றுமில்லாமையிஞல் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் சாஸ்த்ரத்திற்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்கமாட்டாததலால் அந்த ப்ரஹ்மம் சாஸ்த்ர ப்ரதிபாத்யமாவதற்கு வழியில்லை என்றொரு ஆக்ஷேபம் தோன்ற, அதற்குப்பரிஹாரமாக இந்த அதிகரணம் அவதரிக்கின்றது. இவ்வதிகரணத்திற்கு ஸூத்ரம் *தத் து ஸமந்வயாத்* என்பது. இந்த ஸூத்ரத்தில், பரஹ்மண; என்றொரு பதமும் 'சாஸ்த்ரேண' என்றொருபதமும் அத்யாஹாரம் செய்துகொள்ளவேண்டும். (அதாவது, வருவித்துக் கொள்ளவேண்டு மென்றபடி.) தத்—கீழ் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட சாஸ்த்ரப்ரமாணகத்வமானது என்றபடி. ஸமந்வயாத்—நன்ருகப் புருஷார்த்தமாக அந்வயிக்கிறபடியிஞல் என்றபடி. புருஷார்த்தத்வேந ஸம்பந்தமே ஸமந்வயமாவது. பரப்ரஹ்மமானது சாஸ்த்ரத்திஞல் புருஷார்த்தமாக ப்ரதிபாதிக்கப்படுகிறபடியிஞலே அந்த ப்ரஹ்மத்திற்கு சாஸ்த்ரப்ரமாணகத்வம் ஸம்பவிக்கக் குறையில்லை என்றதாக ஸூத்ரத்தின் பொருள் தேறிற்று.

35. இங்குப் பூர்வபக்ஷம் :—பரப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வேண்டுமாஞல் அது வேறொரு ப்ரமாணத்திஞல் அறியப்படாமலிருக்கவேணு மென்பது தவிர மற்றொரு தன்மையும் அதில் இருக்கவேணும். அது என்னென்னில்; தெரிந்துகொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிற தன்மையாம். தெரிந்துகொள்ளவேணு மென்கிற விருப்பம் எந்தவஸ்துவில் உண்டாகின்றதில்லையோ அந்தவஸ்துவைப்பற்றி சாஸ்த்ரம் ப்ரதிபாதநம் செய்யமாட்டாதன்றே. பரப்ரஹ்மம் இதரப்ரமாணத்திஞல் தெரிந்து கொள்ள முடியாததென்பதை ஒப்புக்கொள்வோம். தெரிந்துகொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிற தன்மை ப்ரஹ்மத்தினிடத்தில் இருக்கமுடியாதே, ஏனென்னில்; தெரிந்துகொள்ளவேணுமென்கிற விருப்பமானது உலகில் ப்ரயோஜநவத்தான விஷயத்தில்தான் உண்டாகும். இஷ்டப்ராப்தி அநிஷ்டபரிஹாரம் என்கிற இரண்டோ இரண்டத்திலொன்றே உலகில் ப்ரயோஜன மென்னத் தகுந்தது. இஷ்டப்ராப்தியானது ப்ரவ்ருத்தியிஞலே விளையக்கூடியது. [யாகமென்கிற காரியத்தில் ப்ரவ்ருத்தியுண்டாஞல் ஸ்வர்க்கமென்கிற இஷ்டம் ப்ராப்தமாகிறது.] ப்ரவ்ருத்தியிஞல் இஷ்டப்ராபதியாவது போல், நிவ்ருத்தியிஞல் அநிஷ்டபரிஹார முண்டாகிறது. [மாம்ஸபக்ஷணமென்கிற காரியத்தில் நிவ்ருத்தியுண்டாஞல் அநிஷ்டபரிஹாரமுண்டாகிறது.] ப்ரக்ருதத்தில், பரப்ரஹ்மமானது ப்ரவ்ருத்திக்கோ நிவ்ருத்திக்கோ இலக்கன்றே. (வஸ்துவே கண்ணுக்குத் தெரியாமையிஞல்.) ஆகவே ப்ரயோஜநவத்த்வம் சொல்லமுடியாது. ஆதலால், தெரிந்துகொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிறதன்மை பரப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்க முடியாதாகையாலே அந்த ப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்கவல்லதல்ல; ஆகவே சாஸ்த்ரத்தைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யப்புகுவது ஒவ்வாது—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக;

36. இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:—பரப்ரஹ்மத்திற்கு ப்ரயோஜநாந்தாவத்த்வம் ஸம்பவியாமற்போஞலும், பலபல வேதாந்தவாக்யங்களிஞல் அதுதானேஸ்வயம் ப்ரயோஜநம்—பரமபுருஷார்த்தம் என்று அறிவிக்கப்படுகிறது. "புத்ரஸ்தே.ஜாதঃ" (உனக்குப் பிள்ளை பிறந்தது) என்றும், "தவ க்ருஹே நிதிரஸ்தி" (உன்வீட்டில் நிதியுள்ளது) என்றும் சொன்ஞல் இந்தவாக்யங்களானவை பரமானந்தஹேதுவான புத்ர ஜன்

மத்தையும் நிதிஸத்பாவத்தையும் தெரிவிப்பதுபோல வேதாந்தவாக்யங்கள் பரமாநந்த ஹேது பூதமும் பரமாநந்தஸந்தோஷஸ்வரூபமுமான பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதனம் பண்ணுவது ஸமஞ்ஜஸமேயாகும், அவை அபௌருஷேயங்களாகையாலே புருஷபுத்தியடியாக வரக்கூடிய ப்ரமப்ரமாத விப்ரலிப்ஸைகள் அங்கு எண்ணத்தகாதவை. ஆகவே பொய்சொல்லி வஞ்சிக்கும் பேச்சுக்களல்ல வேதாந்த சாஸ்த்ரங்கள். அப்படிப்பட்டவற்றைக்கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்வது பொருத்தமே யென்றதாயிற்று. இந்த அதிகரணத்தின் ப்ரமேயத்தையுட்கொண்டு பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் (21) * அந்ராஸ்தே நிதிரிதிவத்...ரங்கேச த்வயி ஸகலாஸ் ஸமந்வயந்தே * என்கிற ச்லோகத்தையருளிச் செய்துள்ளார், அங்கு எம்முடைய வியாக்கியானம் நோக்கத்தக்கது.

37. கீழ் விளக்கப்பட்ட நான்கு அதிகரணங்களும் நான்கு ஸூத்ரங்கள். இவையே சதுஸ்ஸூத்ரியென்று வழங்கப்பெறும். இவை சாஸ்த்ராரம்ப ஸமர்த்தனபரங்களென்றும், இனிமேல்தான் சாஸ்த்ராரம்பமாகிறதென்றும் நம் ஆசாரியர்களின் கொள்கை. எம்பெருமானார் திருவடிகளிலேயே ஆச்ரயித்தவரான ஸோமாசியாண்டானென்பவர் முதல் ஸூத்ரமொன்று மாத்திரமே சாஸ்த்ராரம்ப ஸமர்த்தநபரமென்றும் ('ஜந்மாத்யஸ்ய யதঃ' என்கிற) இரண்டாவது ஸூத்ரம் முதற்கொண்டே சாஸ்த்ராரம்பமாய் விட்டதென்றும் அபிப்ராயப்படுகிறார். சதுஸ்ஸூத்ரியும் சாஸ்த்ராரம்ப ஸமர்த்தனபரமென்பதே ஸித்தாந்தமாகக் கொள்ளத்தக்கது. சாரீரகமீமாம்ஸையென்கிற இந்த சாஸ்த்ரம் ஆரம்பிக்க அவசியமில்லையென்று கிளர்ந்த சங்கைகள் கீழே நான்கு ஸூத்ரங்களினாலும் பரிஹரிக்கப்பட்டன வென்றதாயிற்று. இனிமேல் ஒவ்வோரதிகரணத்தின் ப்ரமேயத்தையும் நாம் விவரித்துக்கொண்டு போக இச்சிறு நூலில் அவகாசமில்லாமையால் முக்கியமான சில அதிகரணங்களின் ப்ரமேயத்தை மாத்திரம் மூதலித்துக்கொண்டு மண்டூகப்லுதியில் செல்லுவோம்.

38. ஆனந்தமயாதிகரணத்தைப்பற்றிப் பேசுகிறோம். இவ்வதிகரணமானது முதலத்யாயத்தின் முதற்பாதத்தில் ஆறுவது அதிகரணமாகவுள்ளது. இதற்குக் கீழே ஈக்ஷத்யதிகரணமுள்ளது. அதில் ஜகத்காரணவஸ்துவுக்கு ஸங்கல்ப விசேஷம் ஓதப்பட்டிருத்தலால் அந்த ஸங்கல்பம் கௌணமன்றிக்கே முக்க்யமாகவே நிர்வஹிக்கப்பட வேண்டுதலால் அப்படிப்பட்ட ஸங்கல்பத்திற்கு ஆச்ரயபூதமான ஜகத்காரணவஸ்து அசேதநமான ப்ரதாநமாயிருக்க முடியாதென்று நிரூபிக்கப்பட்டது. இனி, அசேதநவஸ்து ஜகத்காரணமாக வேண்டா; ஜீவனே ஜகத்காரணமாயிருக்கட்டுமே; அவனுக்கு ஸங்கல்பமாகிற ஈக்ஷணம் முக்க்யமானதே ஸம்பவிக்குமன்றோவென்று சங்கையுண்டாக; அதற்குப் பரிஹாரமாய் இந்த அதிகரணம் அவதரிக்கின்றது. இதற்குத் தலையான ஸூத்ரம் "आनन्दमयोऽभ्यासात् - ஆநந்தமயோப்யாஸாத்" *(1-1-13)* என்பது.— ஆநந்தமயঃ அப்யாஸாத் என்று பதவிபாகம். இதற்குமேலுள்ளதான அந்தரதிகரணத்தின் இரண்டாவது ஸூத்ரமான * பேதவ்யபதேசாச்சாந்யঃ * என்கிற ஸூத்ரத்திலிருந்து அந்யঃ என்னும் பதமொன்று இங்கே வருவித்துக் கொள்ளவேண்டும். ஆகவே, ஆநந்தமயঃ அந்யঃ அப்யாஸாத் என்றதாயிற்று. ஆநந்தமய:—ஆநந்தமய சப்தத்தினால் குறிக்கப்பட்ட புருஷன், (அந்யঃ)—ஜீவாத்மாவிற்காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவேயாகக் கடவன்; ஏனென்னில்; அப்யாஸாத்—அளவு கடந்ததாக வோதப்பட்ட ஆனந்த முடைமையானது துக்க மிச்ரனான ஜீவாத்மாவுக்கு இணங்கமாட்டாமல் பரமாத்மாவுக்கே இணங்குமதாகையாலே. என்பது ஸூத்ரத்தின் பொருள். தைத்திரீயோபநிஷத்தில் ஆநந்தவல்லி யென்பது ஒரு பகுதி; அதில் ஆநந்தமயவித்யா ப்ரகரணத்தில் * தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத், அந்யோந்தர ஆத்மா ஆநந்தமயঃ * என்கிற வாக்யத்தினால் ஆநந்தமயனான ஆத்மாவை ப்ரஸ்தாவித்து, அதற்குமேல் * ஸைஷா ஆநந்தஸ்ய மீமாம்ஸா பவதி * என்று தொடங்கி * தே யே சதம் ப்ரஜாபதேராநந்தাঃ, ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்தঃ, ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய * என்னுமளவாக ஆனந்தமயனான ஆத்

மாவுக்குள்ள ஆனந்தத்திற்கு அளவு கூறுமடைவில் ‘நான்முகனுக்கு யாதொரு ஆனந்தமோ, அதிற்காட்டிலும் நூறு மடங்கு அதிகமான ஆனந்தம் பரப்ரஹ்மத்திற்கு ஓர் ஆனந்தம்’ என்று சொல்லி * ச்ரோத்ரியஸ்யச அகாமஹதஸ்ய * என்கிற வாக்யத்தினால் முக்தனுக்கும் அப்படிப்பட்ட ஆனந்தமுடைமை சொல்லிற்று; அகாமஹதனென்றது விஷய விரக்தனென்றபடி. ச்ரோத்ரியனென்றது வேதாந்த ச்ரவணம் பண்ணினவனென்றபடி. வேதாந்த ச்ரவணம் செய்து ப்ரஹ்மோபாஸனத்தினால் முக்தி பெற்றவனென்று தேர்ந்த பொருள். நூறு மடங்காகப் பெருக்கப்பட்ட சதுர்முகானந்தமானது முக்தனுக்கு ஒரு ஆனந்தம் என்று சொல்லிற்றாயிற்று. இங்கு முக்தனுக்குச்சொல்லப்பட்ட ஆனந்தமானது பரப்ரஹ்மத்தின் உபாஸனத்தினால் விளைவது என்று [ச்ரோத்ரிய பதத்தினால்] சொல்லப்பட்டுள்ளது. ஆகவே முக்தானந்தமானது உபாஸநப்ரீதனான பகவானுடைய ஸங்கல்பத்தினால் உண்டுபண்ணப்பட்டதென்னுமிடம் தேறுகின்றது. [முக்தானந்தம் நிருபாதிகமன்று, ஸோபாதிகம் என்றதாகத் தேறுகிறது.] *ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்தஃ* என்கிற விடத்திலோ வென்னில், ‘காரணமொன்றும் சொல்லப்பட்டிராமையினால் பரப்ரஹ்மத்தினுடைய ஆனந்தமானது வேறொருவருடைய ஸங்கல்பாதீநமன்றிக்கே இயற்கையானதென்னுமிடம் நன்கு தெரியவருகிறது. நிருபாதிகமான ஆனந்தமுடைமை பரப்ரஹ்மத்திற்கேயொழிய வேறொருவற்குமில்லை யென்று தேறுதலால் அப்படிப்பட்ட ஆனந்தமுடையதாக ஆனந்தமய சப்தத்தினால் நிர்தேசிக்கப்பட்டவஸ்து ஜீவனிற் காட்டிலும் வேறான பரப்ரஹமமே என்றபடி.

39. தைத்திரீயோபநிஷத்திலுள்ள ஆனந்தவல்லியை ‘ஆநந்தமயவித்யா’ என்று வேதாந்திகள் வழங்குவர். அந்த வித்யையில் * को ह्येवान्यात् कः प्राण्यात्, यदेष आकाश आनन्दो न स्यात्, एष ह्येवानन्दयाति *. [கோஹ்யேவாந்யாத் கஃ ப்ராண்யாத், யதேஷ ஆகாச ஆநந்தோ ந ஸ்யாத். ஏஷஹ்யேவாநந்தயாதி.] என்று ஓதப்பட்டிருக்கின்றது. இதன் பொருளாவது—கீழே சொல்லப்பட்ட ஆகாச சப்தவாச்யமான வஸ்துவானது நிருபாதிகமாயும் அபரிச்சிந்நமாயுமிருக்கிற ஆநந்தத்தை உடையதல்லாமல் இருக்குமானால், பிரமன் முதற்கொண்டு எறும்புவரையிலுள்ள ஜந்துஸமூஹங்களில், கோ வா அந்யாத்=எந்த ஜந்துதான் ப்ராக்ருதமான ஆனந்தத்தையடைய முடியும்? கோ வா ப்ராண்யாத்=எந்த ஜந்துதான் மோக்ஷானந்தத்தையடைய முடியும்? ஏஷ ஏவ ஹி =இந்த ஆனந்தமயனான ஆத்மாவேயன்றோ, ஆநந்தயாதி—ப்ராக்ருதமாயும் அப்ராக்ருதமாயுமுள்ள எல்லாவிதமான ஆனந்தத்தையும் விளைவிக்கின்றது. [ஆநந்தயதி என்கிற சொல்வடிவத்தில் யகாரம் நீண்டிருப்பது சாந்தஸமென்றுணர்க.] இங்கே இப்படிச் சொல்லியிருப்பதும் தவிர, உத்தரநாராயணாநுவாகத்திலும் * तमेवं विद्वानमृत इह भवति, नान्यः पन्था विद्यतेऽयनाय *. தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி, நாந்யஃ பந்தா வித்யதே அயநாய * என்பதனாலும் இவ்வர்த்தமே நிலைநாட்டப்பட்டிருக்கின்றது ஏவம் தம் வித்வாந்—இவ்விதமாக அந்த மஹாபுருஷனை உபாஸிப்பவன், அம்ருதோ பவதி—மோக்ஷாநந்தத்தைப் பெற்றவனாகிறான், அயநாய—அந்த மோக்ஷானந்த ப்ராப்தியின் பொருட்டு, அந்யஃ பந்தா ந வித்யதே—அந்த மஹாபுருஷனைத் தவிர்த்து வேறு உபாயமில்லை. என்பது இந்த ச்ருதிவாக்யத்தின் பொருள். * ஏஷஹ் யேவாநந்தயாதி * என்ற ச்ருதிவாக்யத்தில் அந்வயமுகேந தெரிவிக்கப்பட்ட அர்த்தமே * நாந்யஃ பந்தா வித்யதே அயநாய * என்கிற ச்ருதிவாக்யத்தில் வ்யதிரேகமுகேந தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்னுமித்தனையே வாசி. ஆக உபயச்ருதிகளும் ஏகார்த்தமாயிருக்கையினாலே, உத்தரநாராயணாநுவாக வாக்யம் லக்ஷ்மீபதியையே விஷயமாகக் கொண்டிருப்பது போலவே ஆநந்தமய வித்யையிலும் அப்பெருமானே விஷயபூதன் என்னுமிடம் அறிய வெளிது. இன்னமும், ஆநந்தமய வித்யையில் *स यश्चायं पुरुषे, यश्चासावादित्ये। स एकः * [ஸ யச்சாயம்

புருஷே, யச்சாஸாவாதித்யே. ஸ ஏக:] என்கிற வாக்யத்தினுல் ஆனந்தமயனையும் ஆதித்ய மண்டலத்தினுள்ளேயுள்ள புண்டரீகாக்ஷனையும் ஒன்ருகச்சொல்லி யிருப்பதனுலே அந்த புண்டரீகாக்ஷனே ஆநந்தமயன் என்று தேறிநிற்கிறது. ஆக இப்படிப்பட்ட அடையாளங்களினுல் ஆநந்தமய வித்யாவேத்யனும் புண்டரீகாக்ஷனுமானவன் பரம புருஷனே யென்று தேறிற்ருகிறது.

40. பூர்வபக்ஷம்:—ஆனந்த வல்லியில் * ब्रह्मविदाप्नोति परम् * [ப்ரஹ்மவிதாப் நோதி பரம்] என்று ப்ரஹ்மத்தை ப்ரஸ்தாவித்து * ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம *] என்று அந்த ப்ரஹ்மத்தின லக்ஷணங்கூறி [தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந ஆகாசஸ் ஸம்பூத:.] இத்யாதி வாக்யத்தினுல் அந்த ப்ரஹ்மம் ஆத்மாவென்னுமிடத்தையும் அதில் நின்றும் ஆகாசாதி பதார்த்தங்களின் உத்பத்தியையுஞ் சொல்லி, * [தஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத். அந்யோந்தர ஆத்மா ஆநந்தமய:] என்றவளவால் உபக்ராந்த மான ஆத்மோபதேச பரம்பரையானது ஆனந்தமயனில் ஸமாப்தி செய்யப்பட்டிருக் கிறது. ஆகவே உபக்ரமிக்கப்பட்ட ப்ரஹ்மம் ஆநந்தமயனுன ஆத்மாவே யென்று நிச்சயிக்கப்படுகிறது. அந்த ஆனந்தமய ஆத்மாவுக்கு [தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா] என்ற உத்தரவாக்யத்தில் சரீரஸம்பந்தித்வமாகிற சாரீரத்வம் சொல்லப்பட்டிருக்கின் றது. கர்மபரவசனுன ஜீவாத்மாவுக்கே கர்மபலாநுபவார்த்தமாக சரீர ஸம்பந்தம் ஸம்பவிக்கும்; அகர்மவச்யனுன பரமபுருஷனுக்கு அது ஸம்பவிக்க நியாயமில்லை. ஆகவே சரீரஸம்பந்த முடையவனுக ஓதப்பட்ட இந்த ஆனந்தமயனுன ஆத்மா ஜீவாத்மாவென்றே நிச்சயிக்கலாகிறது.

41. என்கிற பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம். நிருபாதிகமான ஆனந்த முடைமை முதலிய குணங்கள் ஜீவாத்மாவுக்கு ஸம்பவிக்கமாட்டாவாகையாலும், ஸகல சராசரங்களையும் சரீரமாகக் கொண்டவனுக வோதப்படுகின்ற பரமாத்மாவுக்கு அப்படிப்பட்ட ஸகல சரீரகத்வமாகிற சாரீரத்வம் நன்ருக ஸம்பவிக்கக் கூடியதாதலால் நிருபாதிக ஆனந்த சாலியாகக்கடவன். ஆநந்தமய: என்றவிடத்திலுள்ள மயட்ப்ரத்ய யத்திற்கு விகாரம் அர்த்தமாகையாலே விகார மற்றவனுன பரமாத்மாவுக்கு ஆநந்த விகாரத்வம் பொருந்தமாட்டாதென்கிற வாதமும் அநுபபந்நம்; மயட்டுக்கு விகாரமே அர்த்தம் என்கிற நிர்ப்பந்தமில்லை; "அந்நமயோ யஜ்ஞ:" என்று சொன்னுல் அந்ந விகாரமென்று பொருளன்றே; இங்கு மயட்டுக்கு ப்ராசுர்யமேயன்ருே பொருள். (ப்ராசுர்யமாவது—மலிவு.) அன்னம் மலிந்த வேள்வி என்பது தானே பொருளா கிறது. இப்படியே இங்கும் 'ஆனந்தம் மலிந்தவன் பரமாத்மா' என்றே பொருள் படக் குறையில்லாமையாலே விகாரவாதம் அப்ரஸக்தம். அடுத்தபடியாக * யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந், நபிபேதி குதச்சந * என்று வாக்குக்கும் நெஞ்சுக்கு மெட்டாதபடி அப்ரமேயமான ஆனந்தமுடையனுக வோதப்பட்ட பரமாத்மாவினிடத்திலேயே யன்ருே மலிந்தஆனந்தமுடைமை தேறக் கூடியது.

42. இதற்குமேல் ஒருவாதம் தோன்றக்கூடும்; ஆநந்த ப்ராசுர்யமாவது ஆனந் தத்தினுடைய ஆதிக்யமேயாகும். ஆனந்தம் அதிகமென்று சொன்னுல் ஆநந்த ப்ரதி கோடியான துக்கம் சிறிது உண்டென்று தோன்றியே தீருமல்லவா? [ஆதிக்யமென் பது ப்ரதியோகியை அபேக்ஷித்திருக்குமாகையாலே எதைக்காட்டிலும் அதிகமென்று சொல்லியாக வேண்டுமாகையாலே ஆநந்தமயனென்று கொள்ளப்பட்ட பரம புருஷ னிடத்தில் துக்க ஸம்பந்தம் இசையப்பட்டதாகவேயாயிற்று—என்றபடி.] ஏவஞ்ச, அகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந மென்னப்படுகிற பரப்ரஹ்மத்தினிடத்தில் சிறிதளவுகூட ஹேயஸம்பந்தம் ஸம்பவிக்கமாட்டாதாகையாலே, ப்ரசுராநந்த சாலித்வ மென்று பரிஷ்கரிக்கப்பட்ட ஆநந்த மயத்வமும் அங்குச் சொல்லுவதற்கில்லை என்ப

தாக.—இதுவும் பிசகு. அந்த ஆனந்த ப்ராசுர்யத்தை விவரிக்கப் புகுந்த *ஸைஷா ஆநந்தஸ்ய மீமாம்ஸா பவதி* இத்யாதியான ஆநந்தமீமாம்ஸையில் *தே யே சதம் ப்ரஜாபதே ராநந்தா:* என்கிற வளவாக ப்ரஸ்தாவிக்கப்பட்ட சதுர்முகபர்யந்த ஸகல ஜீவர்களின் ஆனந்தத்திற் காட்டிலும் நூறுமடங்கு அதிகமாயிருக்கையாகிற ப்ராசுர்யமே ஆநந்தமய சப்தத்தினுல் விவக்ஷிதமாக விவரித்திருக்கையாலே ப்ரஸ்துதனை ஆநந்தமய ஆத்மாவில் ஆநந்தமயனென்கிற சொல்லிலிருந்து துக்க ஸம்பந்தம் ப்ரஸங்கிக்க விரகில்லை.

43. இவ்விடத்தில் ப்ராஸங்கிகமாக வொருவிஷயம் எழுதவேண்டியதாகிறது. மேலே அநுவதிக்கப்பட்டதொரு ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்கையில் பரம புருஷனுக்கு ஸ்வல்பதுக்க ஸம்பந்தமும் கிடையாதென்று இங்கே நிர்வஹித்துவிட்டு, அந்தப் பரம புருஷனுடைய தயை யென்னும் குணத்தை நிரூபணம் செய்யுமிடத்து எம்பெருமான் அடியார்களின் துக்கத்தை யநுஸந்தித்துத் தானும் துக்கிப்பதுதான் தயாளுத்வமென்று ஸ்வாமி பாஷ்யகாரரே அருளிச் செய்ததாகக் காணப்படுகிறதே; இது எப்படி பொருந்தும்? எம்பெருமானிடத்தில் துக்கமுமுண்டு என்று இசைந்தால் ஆநந்தமயத்வம் கொள்வதற்கு இடமில்லாமலன்றே இருக்கிறது—என்பதாக ஒரு சங்கை தோன்றக் கூடியதுண்டு. இதற்குப் பரிஹாரம் தெரிந்து கொள்ளவேண்டியது வேதாந்திகளுக்கு மிக அவசியமே. இப்படியொரு சங்கை தோன்றுமென்று ஸ்வாமி பாஷ்யகாரர் தாமே திருவுள்ளம்பற்றி இவ்வதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் சில பங்க்திகளையருளிச் செய்திருக்கிறார்; அவற்றை அநுவதித்துக் காட்டிப் பொருளும் விவரித்துத் தெளிவு பிறப்பிக்கின்றோம். இவ்வதிகரணத்தில் இரண்டாவது ஸூத்ரம் [விகாரசப்தாந் நேதி சேந்ந ப்ராசுர்யாத்] என்பது. இந்த ஸூத்ரத்தின் ஸ்ரீ பாஷ்யத்தில் மேல்வரும் பங்க்திகள் உள்ளன;—

“ यदुक्तम्—आनन्दप्राचुर्यमल्पदु:खसद्भावमवगमयतीति, तदसत्। तत्प्रचुरत्वं हि तत्प्रभूतत्वम्; तच्च इतरस्य सत्तां नावगमयति, इतरसद्भावासद्भावौ तु प्रमाणान्तरावसेयौ। इहच प्रमाणान्तरेण तदभावोऽवगम्यते * अपहतपाप्मेत्यादिना। तत्रैतावदेव वक्तव्यम्-ब्रह्मानन्दस्य प्रभूतत्वम् अन्यानन्दस्याल्पत्वमपेक्षत इति। उच्यते च तत् * स एको मानुष आनन्द इत्यादिना जीवानन्दापेक्षया ब्रह्मानन्दो निरतिशयदशापन्नः प्रभूत इति ॥ ” என்று. இந்த ஸ்ரீ ஸூக்திகளின் தாற்பரிய மென்ன வென்றால்; பரப்ரஹ்மத்தினிடத்தில் ஆனந்தம் அதிகமாக இருக்கிறது என்று சொல்வதனுல் சிறிது துக்கமிருப்பதாகச் சொன்னதாகிறது என்கிற வாதம் பிசகு. ப்ரஹ்மத்தினுடைய ஆனந்தம் அபரிமிதம் என்றால் இவனுடைய ஆனந்தம் பரிமிதம் என்று இவ்வளவுதான் ஏற்படுமேயொழிய ப்ரஹ்மத்தினிடத்தில் ஸ்வல்பதுக்க மிருக்கிறது என்றும் சொன்னதாகத் தேறுவதற்கு வழியே யில்லை. துக்கம் இருக்கிறதோ இல்லையோ அது வேறு ப்ரமாணத்தினுல் ஏற்படவேண்டுமே யொழிய ஆநந்த ப்ராசுர்யத்தைத் தெரிவிக்கிற ஆநந்தமய பதத்தினுல் அது ஏற்படாது. ஆனந்தத்திற்கு ப்ரதி கோடியான வஸ்து ப்ரஹ்மத்தினிடத்தில் இல்லையென்பது * அபஹதபாப்மா * இத்யாதியான வேறு ச்ருதியினுல் தெரிய வருகிறது. அதைப் பற்றி இங்கென்ன? இங்குத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் இவ்வளவே-பரப்ரஹ்மத்தின் ஆனந்தம் அளவு கடந்ததென்றால் மற்றையோருடைய ஆனந்தம் இப்படியல்லாமல் அற்பமானது என்பதே தேறி நிற்கும்; அது ஆனந்த வல்லியில் ஸ்பஷ்டமாகவே தெரிவிக்கப்படுகிறது.—என்பதாக.

இங்கு ஸ்வாமி * அபஹதபாப்மா* என்கிற ச்ருதிவாக்கியத்தை யெடுத்துக் காட்டியுள்ளார். அதன் கருத்தை ச்ருதப்ரகாசிகாசார்யர் நன்கு விவரித்துள்ளார். அதை உபநிஷத்பாஷ்யகாரரான ரங்கராமநுஜஸ்வாமி, சாந்தோக்ய உபநிஷத்தில் * அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோக: * என்னுமிடத்துத் தம்முடைய பாஷ்யத்தில் விளக்கியுள்ளார்.

" परमात्मप्रकरणेषु पापशब्दः सुकृतसाधारणः । .... अपहतपाप्मत्वम् अश्लिष्टपाप्मत्व-मित्यर्थः । अकृतकर्माश्लेषस्य सर्वसाधारणत्वात् कृतेऽपि कर्मणि तत्फलाश्लेष उच्यते । अत ईश्वरेण कृतानि पुण्यपापसजातीयानि कर्माणि न शुभाशुभफलजननशक्तानीत्यर्थः । कृतेऽपि पापे तत्फलजननशक्तिप्रतिभटत्व-लक्षणः कश्चिदीश्वरस्य स्वभावविशेषः अपहतपाप्मत्वम् ।" *என்பன அவருடைய பங்க்திகள். இதன் தாத்பர்யஸாரமாவது—பரமாத்மாவை அபஹதபாப்மா வென்று சொல்லுவதன் கருத்து பாபம் செய்யாதவனென்பதல்ல ; பாபம் செய்தாலுங்கூட அதன் பலனாக ஹேயஸ்பர்ச முண்டாகப் பெறாதவனென்றபடி. பாபத்தைச் சொன்னது புண்யத்தையும் சொன்ன படியே. பகவான் புண்யபாபங்களைச் செய்தாலுங்கூட அவற்றின் பலன்கள் தன்மீது ஸம்பந்திக்கப் பெறாதவன் என்பதே இங்கு விவக்ஷிதம். பாபம் செய்தால் அதன்பலன் ஸம்பந்திக்காமல் எப்படியிருக்குமென்று கேட்கலாகாது ; அதுதான் பகவானுடைய விலக்ஷணமான வொரு தன்மை என்பதாம். நம்போல்வார் பாபம் செய்தால் ஹேய ஸம்பந்தமுண்டாகியே தீருகிறது. பகவானுக்கோ அப்படியில்லை. நாம் செய்கிற கருமங்கள் போன்ற கருமங்களைப் பகவானும் செய்வதுண்டு ; செய்தாலும் அதனால் அவனுக்கு ஹேயஸம்பந்த முண்டாவதில்லை. காரணமான கர்மமிருந்தால் கார்யமான ஹேயஸம்பந்தமில்லாமற்போகுமோவென்று சங்கிக்கக்கூடாது ; இதுதான் பகவானுடைய விலக்ஷணமான வைபவம்—என்று இவ்வளவும் உபநிஷத்பாஷ்யகாரருடைய நிரூபணங்கள். இவ்விஷயத்திற்கு அந்தரதிகரணச்ருதப்ரகாசிகையையும் ஸம்வாதமாக எடுத்துக் காட்டியுள்ளார். அபஹதபாப்மா என்பது எந்த வாக்யத்திலிருக்கிறதோ அதே வாக்கியத்தில் தான் விசோக: என்பதுமிருக்கிறது. அங்கும் இதே ந்யாயமாகத்தான் அர்த்தமாகும். சோகமுண்டானாலும் இதனால் ஹேயஸம்பந்த முண்டாகப் பெறாதவன் என்றபடி. ஹேயமான சோகமன்றிக்கே கல்யாண குணங்களிற் சிறந்ததான சோகத்தை யுடையவன் என்றதாகத் தேறும். எப்படியானாலென்ன ? சோகமுள்ளதாக ஒப்புக் கொண்டுவிட்டால் அது ஆநந்தமயத்வத்திற்குக் கொத்தைதானே என்கிறவிந்த வாதத்தையே சிலர் செய்து கொண்டிருக்கலாம். அவர்கள், மேலே யெடுத்துக்காட்டிய உபநிஷத்பாஷ்ய பங்க்திகளில் "ஈச்வரேண க்ருதாநி புண்யபாபஸஜாதீயாநி கர்மாணி" "க்ருதேபி பாபே" என்றுள்ள ஸ்ரீ ஸூக்திகளின் மேலும் ஓயாது சோத்யங்களைச் செய்து கொண்டிருக்கலாமத்தனை. இதைப்பற்றின விரிவு இங்கு இவ்வளவு போதும்.*

44. இனி இரண்டாமத்யாயத்தின் தொடக்கத்திலுள்ள ஸ்ம்ருத்யதிகரணத்தின் ப்ரமேயம் விளக்கப்படுகிறது. * स्मृत्यनवकाशदोषप्रसङ्ग इति चेन्न अन्यस्मृत्यनवकाशदोषप्रसङ्गात् * *(2—1—1.) என்பது ஸூத்ரம். கீழ் முதலத்யாயத்தில்—வேதாந்த ப்ரதிபாதிதமான ஜகத்காரணவஸ்து சேதநாசேதந விலக்ஷணமான பரப்ரஹ்மமென்று அறுதியிடப்பட்டது. பரப்ரஹ்மம் ஜகத் காரணமென்கிற பக்ஷத்தில் எத்தனைவகையான தோஷ சங்கைகள் தோன்றக்கூடுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் கழிப்பதற்காக இரண்டாமத்யாயம் ஆரம்பிக்கப்படுகிறது. உலகில் ஓரிடத்தில் பெரிய கம்பமொன்றை நடுகிறவர்கள் நட்டுவிட்டு அதை ஆட்டிப்பார்ப்பது வழக்கம். எதற்காக வென்னில், அது அவிசால்யமாக வேணுமென்பதற்காகவே. அதுபோலவே இங்கும் கொள்க. முன்னத்யாயத்தில் பரப்ரஹ்மத்திற்குச் சொன்ன ஜகத் காரணத்வம் இவ்வத்யாயத்தில் நன்கு த்ருடீகரிக்கப்படுகிற தென்றதாயிற்று. இதில் முதற்பாதத்தில் ஸாங்க்யர் முதலானவர்களால் கிளப்பப்படும் தோஷங்கள் பரிஹரிக்கப்படுகின்றன. முன்னத்யாயத்தில் நிரீச்வரஸாங்க்யர்களும் ஸேச்வரஸாங்க்யர்களும் நிரஸிக்கப்பட்டனர். அதில் நிரீச்வரஸாங்க்யன் கபிலஸ்ம்ருதி விரோதத்தைக்காட்டி ப்ரஹ்மம் ஜகத் காரணமன்றென்று வாதிப்பதொன்றுண்டு ; அந்த வாதத்தை நிராகரிக்க இவ்வதிகரணம் எழுகின்றது. (ஸூ) ஸ்ம்ருத்யநவகாச தோஷப்ரஸங்க இதி சேத்—சேதநாசேதந விலக்ஷண*

மான ப்ரஹ்மம் ஜகத் காரணமென்று கொண்டால், ப்ரதாநம் காரணமென்று சொல்லுகிற கபிலஸ்ம்ருதி அப்ரமாணமாய் விடுமேயென்னில்; ந—அப்படி சொல்லக்கூடாது; அந்யஸ்ம்ருத்யநவகாச தோஷப்ரஸங்காத்—ப்ரஹ்ம காரணத்வத்தைச் சொல்லுகிற மற்ற ஸ்ம்ருதிகள் அப்ரமாணமாய் விடுமாதலால்—என்பது ஸூத்ரத்தின் பொருள். தங்கள் யோகமஹிமையினுல் பராவரதத்வங்களை உள்ளபடி ஸாக்ஷாத் கரித்தவர்களான மநு பராசராதி மஹர்ஷிகளின் ஸ்ம்ருதிகளையெல்லாம் அப்ரமாணமாக்குவதிற் காட்டிலும் கபில ஸ்ம்ருதியொன்றை அப்ரமாணமாக்குவதுதான் யுக்தம் என்பது கருத்து. இங்கே பூர்வபக்ஷம் வருமாறு;—*ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்* என்பது முதலான வேதாந்த வாக்யங்களுக்கு ஸ்வதந்த்ரப்ரதாந காரணத்வத்தில் தாத்பரியமா? அல்லது சேதநாசேதநவிலக்ஷண ப்ரஹ்ம காரணத்வத்தில் தாத்பர்யமா? என்று ஸந்தேஹம் வந்தால், வேதாந்த வாக்ய தாத்பரியத்தை நிர்ணயிப்பதற்கென்றே தோன்றிய கபிலஸ்மிருதியையநுஸரித்துத் தான் தாத்பர்ய நிர்ணயம் செய்யவேண்டும்; இல்லையாகில் அந்த ஸ்ம்ருதிக்கு ஸர்வாத்மநா அப்ராமாண்யம் சொல்ல வேண்டிவரும். அப்படிச் சொல்லுவதற்கில்லை; வேதாந்தங்களில் ஆப்தராகச் சொல்லப்பட்டிருக்கின்ற கபிலமஹர்ஷி அயதார்த்தவக்தாவாக இருக்க முடியாதாகையாலே அவரியற்றிய ஸ்ம்ருதிக்கு அப்ராமாண்யம் சொல்லவே முடியாது. ஆனால் ப்ரஹ்மகாரணத்வத்தைச் சொல்லுகின்ற மநுஸ்ம்ருதி முதலானவற்றுக்கு மாத்திரம் அப்ராமாண்யம் சொல்லி விடலாமோவென்று கேட்கக்கூடும். கர்மகாண்டத்தில் சொல்லப்பட்ட கருமங்களையும் மந்வாதி ஸ்ம்ருதிகள் விசதீகரிப்பனவாதலால் அந்த அம்சத்திலே அவற்றுக்கு ப்ராமாண்யம் கொள்ள இடமுள்ளது. ஆகவே அவற்றுக்கு ஸர்வாத்மநா அப்ராமாண்யமில்லை; கபிலஸ்ம்ருதியோ வென்னில், கர்மகாண்டத்தில் அடியோடு ப்ரவேசியாமல் ஜ்ஞாந காண்டத்தில் சொல்லப்பட்ட தத்துவங்களை விசதீகரிப்பதற்கென்றே தோன்றினதாகையாலே அதற்கு விருத்தமான ப்ரஹ்மகாரணத்வத்தைக் கொள்ளுமளவில் ப்ரதாந காரணத்வத்தைக் கூறுகின்ற அந்த கபிலஸ்ம்ருதிக்கு வேறு விஷயமில்லாமையாலே ஸர்வாத்மநா அப்ராமாண்யம் வந்து தீரும். ஆகையாலே அதற்கு ஒருவாறு ப்ராமாண்யம் கொள்ளுவதற்காகவும் நிரவகாசத்வ ஆபத்தியைப் பரிஹரிப்பதற்காகவும் அது சொன்ன ப்ரதாநகாரணத்வத்தில் தான் வேதாந்தங்களுக்குத் தாத்பர்யம் கொள்ள வேணும்.

45. என்கிற இந்த பூர்வபக்ஷத்தின்மேல் ஸித்தாந்தம் வருமாறு: கபிலஸ்ம்ருதியானது வேதாந்த வாக்யங்களின் தாத்பர்ய நிர்ணயத்திற்கென்றே தோன்றினதாகையாலே அதை யநுஸரித்தே வேதாந்த தாத்பர்யமறுதியிட வேணுமென்பது யுக்தமென்றாலும், தங்களுடைய யோகமஹிமையினுல் பராவரதத்வங்களை உள்ளபடி ஸாக்ஷாத் கரித்தவர்களான மநுமஹர்ஷி, பராசரமஹர்ஷி முதலான பல மஹர்ஷிகளியற்றிய ஸ்ம்ருதிகளை உபேக்ஷிப்பது தகாது. ஒரு கபிலமஹர்ஷியின் உக்தியைக் கொண்டு பல மஹாயோகிகளின் உக்திகளை உபமர்திப்பது யுக்தமாகாது. கபிலஸ்ம்ருதிக்கும் மந்வாதிகளின் ஸ்ம்ருதிகளுக்கும் பரஸ்பர விரோதம் நேர்ந்தால் ‘ भूयसां स्याद्बलीयस्त्वम् ” என்கிற நியாயத்தாலே மந்வாதிஸ்ம்ருதிகள் பலிஷ்டங்களாகையாலே அவற்றோடு முரண்படுகின்ற கபிலஸ்ம்ருதிக்கு ப்ராந்திமூலகத்வ நிர்ணயம் பண்ணுவதே பொருத்தமானது. மந்வாதிஸ்ம்ருதிகளில் பரப்ரஹ்மத்திற்குத்தான் ஜகத்காரணத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே கபிலஸ்மிருதியைத் தள்ளி மநுபராசராதி ஸூக்திகளின்படியே ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று கொள்வதுதான் யுக்தம். *ருஷிம் ப்ரஸூதம் கபிலம்* என்று கபிலரை ஆப்தராகச் சொல்லியிருக்கையாலே அவருடைய உக்தியைத் தழுவியேயாகவேணுமென்றதும் அஸங்கதம். ச்ருதிஸ்மிருதிகளில் ப்ருஹஸ்பதியையும் கொண்டாடியிருப்பதைக் காண்கிறோம். அவ்வளவால் அவரியற்றிய லோகாயதத்தைக் கொண்டு ச்ருதியின் பொருளை நிர்ணயிப்பாருண்டோ? இல்லையே.

46. இனி, க்ருத்ஸ்நப்ரஸக்தி யதிகரணத்தின் ப்ரமேயம் விளக்கப்படுகிறது: இதுவும் இரண்டாமத்யாயத்தின் முதற்பாதத்திலுள்ளது. * कृत्स्नप्रसक्तिर्निरवयवत्वशब्दकोपो वा * என்பது பூர்வபக்ஷ ஸூத்ரம். *ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்* என்பது ஸித்தாந்த ஸூத்ரம். ப்ரஹ்மம் ஜகத்காரணம் என்னும் வாதத்தில் ப்ரஹ்மமே ஜகத்தாகப் பரிணமிப்பதாய்த் தேறுகிறது. ப்ரஹ்மமோ நிரவயவமானது; அது ஜகத்தாகப் பரிணமிக்கும்போது ப்ரஹ்மம் முழுவதுமே காரியப்பொருளாகப் பரிணமிக்க வேண்டிய தாகிறது. ஏகதேசேந பரிணமிக்கிறதென்னும் பக்ஷத்தில் ப்ரஹ்மம் நிரவயவமென்று சொல்லுகிற ச்ருதி விரோதிக்கும். ஆகையாலே ப்ரஹ்மம் ஜகத்காரணமாகவொண்ணாது—என்கிற பூர்வபக்ஷமே முந்தின ஸூத்ரத்தின் பொருள். (இதைச் சிறிது விவரிப்போம்.) கீழே உபஸம்ஹாராதிகரணத்தில் * क्षीरवद्धि * என்று க்ஷீரத்ருஷ்டாந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. க்ஷீரத்ருஷ்டாந்தம் பொருந்தாது. க்ஷீரம் ஸாவயவமாகையாலே அதுபோல ப்ரஹ்மமும் ஸாவயவமென்ன வேணும். அப்படி கொண்டால் நிரவயவத்வ ச்ருதி கோபிக்கும்; நிரவயவமாகில் ப்ரஹ்மம் க்ருத்ஸ்நபாகத்தாலும் பரிணாமமடைந்ததாக வேணும். ஆகட்டுமேயென்னில், க்ருத்ஸ்நமும் ஒரு கார்யப் பொருளாகப் பரிணமித்தபோது மற்றொரு காரியப்பொருளாகப் பரிணமிக்க ப்ரஸக்தி யில்லை. ஆகையாலே ப்ரஹ்மகாரணத்வவாதம் ஒவ்வாது—என்பதாகப் பூர்வபக்ஷம்.

47. இதன்மேல் ஸித்தாந்தமுணர்த்தும் ஸூத்ரம்—*ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்* என்பது. துசப்தம் பூர்வபக்ஷத்தை வ்யாவர்த்திப்பிக்க வந்தது. ப்ரஹ்மம் நிரவயவமென்பதும், அது கார்யப்பொருளாகப் பரிணமிக்கிறதென்பதும் ஆகிய இரண்டும் ச்ருதிஸித்தமான அர்த்தங்கள். ப்ரஹ்மமோ சப்த ப்ரமாணமொன்றிலேயே அறியப் படுமது; ஆகையாலே கீழே தோன்றின பூர்வபக்ஷம் யுக்தமன்று என்பதாக ஸூத்ரார்த்தம். இதைச்சிறிது விவரிப்போம். ஸாவயவமான வஸ்துதான் ஏகதேசத்தாலே பரிணமிக்க முடியுமென்றும், நிரவயவமான வஸ்துவானது அப்படி ஏகதேசத்தாலே பரிணமிக்கமாட்டாமல் க்ருத்ஸ்நாம்சத்தாலும் பரிணமித்தாக வேணுமென்றும் ஒரு நியதி சொல்லுவதானது லௌகிக பதார்த்த த்ருஷ்டியினாலேதானே. இப்படியொரு வ்யாப்தி கல்பிக்க வேணுமானால் பரப்ரஹ்மம் தவிர மற்ற வஸ்துக்களில் மாத்திரமே கல்பிக்கலாம். ப்ரஹ்மத்தினிடத்திலும் இந்த வ்யாப்தி கொள்ள அவசியமில்லை. ஏனென்னில், ப்ரஹ்மத்தை நாம் சாஸ்த்ரங்கொண்டே அறிகிறோம். அந்த சாஸ்த்ரமானது ப்ரஹ்மத்திற்கு நிரவயவத்வத்தையும் பஹுபவநத்தையும் [அதாவது, நாநா வஸ்துக்களாகப் பரிணமிப்பதையும்] ஓதியிருக்கின்றது. அது ப்ரஹ்மத்தினுடைய அநிர்வசநீயமான சக்தி விசேஷத்தைப் பொறுத்தது. அத்புத சக்தியுக்தமான ப்ரஹ்மத்தினிடத்திலே நாம் லௌகிகவஸ்து த்ருஷ்ட்யா சோத்யம் செய்வது தகாது. ஒன்று பாருங்கள். கண்ணுடையவன்தான் காணமுடியும், காதுடையவன்தான் கேட்கமுடியும்; கண்ணிலாதான் காணகில்லான்; செவியிலாதான் கேட்ககில்லான்—என்று ஒரு வ்யாப்தி சொல்ல நினைத்தால் பரப்ரஹ்மந்தவிர மற்ற பேர்களிடத்தில்தானே இப்படிச் சொல்ல முடியும். * पश्यत्यचक्षुः स शृणोत्यकर्णः, अपाणिपादो जवनो ग्रहीता * என்று ஓதப்படுகிற பரமபுருஷனிடத்திலே இந்த வ்யாப்தி பயன் பெறுதன்றே. ஆகவே உலகில் காணும் நியாயத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தினிடத்தில் சோத்யம் செய்வது கூடாது.

48. வேதாந்திகள் இங்கு விசேஷித்துக் குறிக்கொள்ளவேண்டிய விஷயமுண்டு: ப்ரப்ரஹ்மத்திற்கு ஜகதாத்மநா பரிணாமம் போலவே ப்ரதிவஸ்து பூர்ணத்வமும் ச்ருதிஸித்தமாயிருக்கின்றது. நிரவயவமான ப்ரஹ்மம் வஸ்துதோறும் எங்ஙனே பரிஸமாப்ய வர்த்திக்கமுடியும்? என்று சிலர் சோத்யம் செய்வதுண்டு. அந்த சோத்யமும் * ச்ருதேஸ்து சப்தமூலத்வாத் * என்கிற இந்த ஸூத்ரத்தினால் சிக்ஷிக்கப்

பட்ட ந்யாயத்திலேயே மடிந்தொழிகின்றது. இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் வெகு சதுரமாக அருளிச்செய்து முடித்திருக்கிறார். அப்படியிருந்தும் இதில் இன்னமும் சிலர் தெளிவுபெறாமல் கலங்கியிருக்கிறார்கள். பகவான் ஒரு வஸ்துவிலே பரிஸமாப்ய வர்த்தித்துவிட்டால் அவ்வளவோடு பகவான் உபக்ஷீணனாய் விடுகிறபடியால் மற்றொரு பொருளில் வியாபிக்க எப்படி முடியுமென்று இந்த சோத்யத்தையே திருப்பித்திருப்பிச் செய்துகொண்டு காலங் கழிக்கிறார்கள். அந்தோ! அன்னவர்கள் * ச்ருதேஸ் து சப்தமூலத்வாத் * என்கிற ஸூத்ரம் என்ன சிக்ஷிக்கிறதென்பதையும் இந்த ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வாமி என்ன அருளிச்செய்கிறாரென்பதையும் சிறிதும் நோக்கமாட்டிற்றிலர். * शब्दैकप्रमाणकत्वेन सकलेतरवस्तुविसजातीयत्वादस्यार्थस्य विचित्रशक्तियोगो न विरुध्यते * என்பது ஸ்ரீபாஷ்யஸூக்தி. இதைப்பற்றின விரிவுகளை நம்முடைய ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா, அத்புதசக்தி முதலான க்ரந்தங்களிலே காண்க.

49. இனி, ப்ரயோஜநவத்த்வாதிகரணத்தின் ப்ரமேயம் பற்றிப் பேசுவோம். கீழே விவரித்த அதிகரணத்திற்கு அடுத்த அதிகரணமே இது. பரமபுருஷன் ஸர்வசக்தி யுக்தனாகையாலும் ஸத்ய ஸங்கல்பனாகையாலும் அவன் ஸங்கல்பமாத்ரத்தாலே ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதாகச் சொல்லப்படுகிற விஷயம் ஸம்பாவிதமன்று; ஏனென்னில்; ப்ரஹ்மம் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது ஏதேனுமொரு ப்ரயோஜனம் இருந்து தீர வேண்டும். உலகில் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்போது நிஷ்ப்ரயோஜநமாகச் செய்யமாட்டான். ப்ரயோஜன மென்பது தன்னையுஞ் சேரும், பிறரையும் சேரும். ப்ரக்ருதத்தில் அவாப்தஸமஸ்தகாமனான பகவானுக்கு ஸ்ருஷ்டியினால் ஒரு ப்ரயோஜநமும் உண்டாக விரகில்லை. உண்டாகுமாகில் அவனை அவாப்தஸமஸ்தகாமனென்னப் போகாது. ஸ்ருஷ்டியினால் பகவானுக்கு ப்ரயோஜனமில்லையாகிலும் நம் போன்ற ஜீவர்களுக்கு ப்ரயோஜனமாகிற தென்னவும் இடமில்லை. ஆத்யாத்மிகாதி துக்கங்களுக்கே ஹேதுவாகின்ற ஸ்ருஷ்டியானது ஜீவர்களுக்கு ப்ரயோஜநப்பட விரகில்லையன்றோ. பகவானுக்குப் பக்ஷபாதித்வம் நிர்தயத்வமாகிற தோஷங்களை சங்கிக்கச் செய்வதாயுமுள்ளது ஜகத்ஸ்ருஷ்டி. ஆகவே பகவான் ஸ்ருஷ்டிகர்த்தாவாக இருக்க முடியாதென்று பூர்வபக்ஷம் செய்வதாகவுள்ளது இவ்வதிகரணத்தில் முதல் ஸூத்ரம் * ந ப்ரயோஜநவத்த்வாத் * என்பது; இங்கு ஸ்ருஷ்டே: என்றொருபதம் வருவித்துக்கொள்ள வேணும். ஸ்ருஷ்டியானது ப்ரயோஜனத்தோடு கூடியிருக்கவேண்டியதாகையாலே ப்ரஹ்மம் ஸ்ருஷ்டிகர்த்தாவாக இருக்கமுடியாதென்று ஸூத்ரத்திற்குப்பொருள். இதன் மேல் ஸித்தாந்த ஸூத்ரம் * லோகவத் து லீலா கைவல்யம் * என்பது. உலகில் ஸார்வபௌமனாயிருக்கு மோரரசன் ப்ரயோஜநாந்தர மொன்றையும் கணிசியாமலே லீலையாகவே பந்துவிளையாடல் முதலியன செய்யக் காணாநின்றோம். அதனால் அவனுடைய அவாப்தஸமஸ்தகாமத்வத்திற்குக் கொத்தை யொன்றுமில்லை. அதுபோலவே பரம புருஷனும் லீலார்த்தமாகவே ஜகத்ஸ்ருஷ்டி பண்ணக்குறையில்லை யென்றபடி. * மன் பல்லுயிர்களுமாகிப் பலபல மாயமயக்குக்களால், இன்புறுமிவ் விளையாட்டுடையான் * என்று நம்மாழ்வாரும், * நாட்டைப் படையென்று அயன் முதலாத்தந்த நளிர்மா மலருந்தி வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் * என்று ஆண்டாளு மருளிச்செய்தவை இங்கே அநுஸந்தேயம். விஷமஸ்ருஷ்டி காண்பதனாலே பகவானுக்குப் பக்ஷபாதித்வமும் நிர்தயத்வமும் சங்கிக்க நேர்கின்றதே யென்னில், அந்த சங்கை * வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததா ஹி தர்சயதி * என்கிற அடுத்த ஸூத்ரத்தினால் பரிஹரிக்கப் படுகிறது. அந்தந்த ஜீவர்கள் செய்த கருமங்களுக்குத் தக்கபடி நீசோச்ச ஸ்ருஷ்டிகள் ஏற்படுகிறபடியாலே பரமபுருஷனுக்கு வைஷம்யமோ நைர்க்ருண்யமோ ப்ரஸங்கிக்கமாட்டாதென்றபடி. இதன்மேலும் தோன்றுகிற சங்கைக்கு அடுத்த ஸூத்ரம் பரிஹாரமுணர்த்துகின்றமை கண்டுகொள்வது.

50. இனி இரண்டாமத்யாயத்தின் இரண்டாவது பாதத்தில் ஸர்வதாநுபபத்தியதிகரணத்தின் ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது. ஸர்வசூந்யத்வவாதிகளான பௌத்த ஏகதேசிகளின் பக்ஷம் இங்கு நிரஸிக்கப்படுகிறது. பரப்ரஹ்மமே ஜகத்காரணமென்று நன்கு நிலைநாட்டத் தோன்றிய இந்த அத்யாயத்தில் ஸர்வசூந்யத்வ வாதத்தை நிரஸிக்க என்ன ப்ரஸக்தியென்று சிலர் நினைக்கக்கூடும். ஜகத்காரணவஸ்து ப்ரதாநமா? பரமாணுவா? பரப்ரஹ்மமா? என்கிற விசாரம் எப்போது பொருந்துமென்னில்; உண்மையில் ஜகதுத்பத்தி யென்பதொன்று நிரூபிக்க முடியுமானால் அப்போது பொருந்தும். அடியோடு இல்லாததவொரு பிள்ளைக்கு மாதாபிதாக்களைப்பற்றி விசாரம் செய்வதுண்டோ? ஜகதுத்பத்தியே நிரூபிக்கமுடியாததாயிருக்க, எது ஜகத்காரணம்? என்கிற சர்ச்சை ஏதுக்கு? உத்பத்தியானது भाव (பாவ) த்திலிருந்து அங்கீகரிக்கப்படுகிறதா? அபாவத்திலிருந்து அங்கீகரிக்கப்படுகிறதாவென்று கேட்கிறோம். भाव த்திலிருந்து என்பது சேராது; மண்பிண்டத்திலிருந்து பானை முதலியன உண்டாகின்றனவென்றால் மண்பிண்டத்தை உபமர்த்தித்துக் கொண்டுதானே யுண்டாகின்றன. எந்த காரியப் பொருளும் காரணப்பொருளை உபமர்த்தியாமல் உண்டாவதில்லை யென்பதைக் காணாநின்றோம். காரணாகாரத்தின் விநாசந்தானே உபமர்த்தமாவது; அதுதான் அபாவமே. ஆக भाव த்தில் நின்றும் உத்பத்தியில்லை யென்று தேறிற்று. அபாவத்தில் நின்றுங்கூட உத்பத்தியில்லையென்பது அநாயாஸமாகத் தெரியவரும். அபாவத்திலிருந்து भा வோத்பத்தி ஸம்பவிக்கமாட்டாதன்றோ. ஆக உத்பத்தியே நிரூபிக்க முடியாதிருப்பதால் உத்பத்திக்குப் பிற்பட்டனவான விகாரங்கள் எதுவுமே கிடையாவென்பது ஸித்தம். லோகவ்யவஹாரமெல்லாம் ப்ரம மூலகமே. ஆக சூந்யமே தான் தத்துவம்=என்பவர்கள் இங்கு நிரஸிக்கப்படுகிறார்கள். * सर्वथाऽनुपपत्तेश्च * [ஸர்வதாநுபபத்தேச்ச] என்பது ஸூத்ரம். ப்ரமேயங்களோ ப்ரமாணங்களோ எதுவும் உண்டாகிலுமாம், இல்லையாகிலுமாம்; பூர்வபக்ஷிக்கு அபிமதமான சூந்யத்வம் தேறாதாகையாலே மாத்யமிகதர்சநம் அஸமஞ்ஜஸ மென்றபடி. 'ஸர்வம் சூந்யம்' என்று சொல்லுபவர்கள் தங்களுக்கு அபிமதமான இவ்வர்த்தத்தை ஸாதித்துத் தரும்படியான ப்ரமாணமொன்று உண்டென்று இசையும் பக்ஷத்தில் ப்ரமாண ஸத்பாவத்தை யிசைந்தபோதே ஸர்வசூந்யவாதம் தொலைந்தது. ப்ரமாணமில்லையென்னும் பக்ஷத்தில், ப்ரமாணமில்லாமையினாலேயே தங்களுக்கு அபிமதமான அர்த்தம் அஸித்தமென்று முடிந்தது. மேலும், 'ஸர்வம் சூந்யம' என்கிற விந்தவார்த்தையினால் நாஸ்தித்வந்தானே விவக்ஷிதமாக வேணும். ஒரு ரூபத்தை விட்டு மற்றொரு ரூபத்தையடைவதே நாஸ்தி பதார்த்தமாகையாலே ரூபாந்தரத்தாலே அஸ்தித்வமே சொல்லப்பட்டதாக முடிகிறது. மண்ணுண்டையொன்று இருந்தது. அது நசித்தவளவிலே 'ம்ருத்பிண்டோ நாஸ்தி' என்று சொல்லுகிறான். இந்த வ்யவஹாரத்தில் பானையென்கிற அவஸ்தைதானே விஷயமாகிறது.

51. உலகில் அஸ்தி நாஸ்தித்வங்களை வழங்குகிறவர்கள் 'இப்போது மண்ணுண்டையிருக்கிறது, இப்போது மண்ணுண்டையில்லை; இங்கு மண்ணுண்டையிருக்கிறது, இங்கு மண்ணுண்டையில்லை' என்றிப்படி இடத்தையும் காலத்தையும் உட்படுத்தியே வ்யவஹரிக்கிறார்கள். தேச காலங்களைச் சேர்க்காமல் வெறுமனே 'மண்ணுண்டையில்லை' என்கிற ப்ரதீதியோ வ்யவஹாரமோ எங்கும் காண்பதில்லை. 'இப்போது ம்ருத்பிண்டமிருக்கிறது' என்றோ 'இங்கு ம்ருத்பிண்டமிருக்கிறது' என்றோ ஒருவன் வ்யவஹரித்தால் மண் என்னும் த்ரவ்யத்திற்கு பிண்டத்வாவஸ்தை விஷயம். 'இப்போது ம்ருத்பிண்டமில்லை' என்றோ "இங்கு ம்ருத்பிண்டமில்லை' என்றோ வ்யவஹரித்தால் பிண்டத்வாவஸ்தையின் நாசமாகிய घट (கட) த்வாவஸ்தை விஷயம். ஆக நாஸ்தித்வவ்யவஹாரம் பண்ணினாலுங்கூட வேறொரு ஆகாரத்தாலே அஸ்தித்வமே தேறி நிற்கிறதென்பதை ஸர்வாநுபவஸாக்ஷிகமாகக் காணலாம். இன்ன வஸ்து இங்கில்லை என்றால் மற்றோரிடத்திலுள்ளதாகத் தேறியே தீரும். இப்போதில்லையென்று

லும் மற்றொருபோதில் உண்டென்றதாகத் தேறியேவிடும். ஆகவே ஒருபடியாலும் ஸர்வசூந்யவாதம் ஸித்தியாது என்றதாயிற்று. ஸூத்ரத்தின்மேலே பொருள் காண்பது எங்ஙனே யென்னில்; ஸர்வதா—ஸர்வப்ரகாரத்தாலும், 'அநுபபத்தே:—ஸ்வாபிமதமான ஸர்வசூந்யவாதம் உபபந்நமாகாமையினாலே என்றபடி. 'ஸர்வப்ரகாரத்தாலும்' என்றதை ஸ்ரீ பாஷ்யாதிகளில் ஸ்வாமி விவரித்தருளும் போது " सदितिप्रतिज्ञायाम् असदितिप्रतिज्ञायां च " என்றருளிச்செய்கிறார். சங்கரபாஷ்யத்தில் இவ்விதமாக அர்த்தம் செய்யப்படவில்லை. ' देवदत्तः सर्वथा अयोग्यः, यज्ञदत्तः सर्वथा मूर्खः ' என்றால் இதற்கு எவ்விதமாகப் பொருள் கொள்கிறோமோ அவ்விதமாகவே சங்கராசாரியர் பொருள் கொண்டார். நம்ஸ்வாமி கொண்ட பொருள்தான் உண்மையில் ஸமஞ்ஜஸமானது. ஸ்வாமிக்கு இப்பொருள் தோன்றினது எதனாலென்னில்; திருவாய்மொழியில் (1—1—9) * உளனெனிலுளன் அவனுருவ மிவ்வுருவுகள், உளனலனெனில் அவனருவ மிவ்வருவுகள், உளனெனவிலனெனவிவைகுண முடைமையின், உளனிருதகைமையொ டொழிவிலன் பரந்தே * என்ற பாசுரங்கொண்டே இந்த ஸூத்ரத்தின் பொருளை ஸ்வாமி அறுதியிட்டருளினாரென்பது நிஸ்ஸந்தேஹம். அப்பாசுரத்தின் ஆறாயிரப்படியை ஸேவித்தால் இஃது எளிதிற் புலனாம். அப்பாட்டிற்குத் தமிழ் மொழியாலெழுதப் பட்டுள்ள பொருள்தான் ஸ்ரீபாஷ்யத்தில் வடமொழியாலெழுதப்பட்டுள்ளதென்க.

52. இனி மூன்று மத்யாயத்தில் சிறிது செல்வோம். கீழ்க்கழிந்த இரண்டு அத்யாயங்களுள் முதலத்யாயத்தினால்—ஜகஜ் ஜந்மாதி காரணமாய் ஸர்வ சேஷியான வஸ்து பரப்ரஹ்மமே யென்றும், நான்முகன் சிவன் இந்திரன் முதலானவர்கள் அப் பரம புருஷனாலேயே தன்னுடைய லீலைக்காக ஸ்ருஷ்டிக்கப்பட்டு உபஸம்ஹரிக்கப்படுகிறார்களென்றும், அந்த பரமபுருஷன் ப்ரக்ருதி மண்டலத்திற்குப் புறம்பாய் நித்யஸூரி ஸேவிதமான ஸ்தாநவிசேஷத்திலே ஸ்வேச்சையினாலே சுடரொளி மயமான திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பரிக்ரஹித்து அப்ரமேயமான ஆனந்தத்தை யுடையனாய் தன்னடிபணிந்தார்க்கும் அபரிமிதமான ஆனந்தத்தை யளிப்பவனாய் ஸம்ஸாரபந்தத்தில் நின்றும் விடுபட்ட முக்த புருஷர்களினால் அநுபவிக்கப்பட்டுக் கொண்டிரா நின்றானென்றும் தெரிவிக்கும் முகத்தினால்—ஸம்ஸாரிகளுக்கு பகவதநுபவ குதூஹலத்தை யுண்டாக்குவதற்காக பரம புருஷார்த்தமான பகவத்ஸ்வரூப ஸ்வபாவாதிகள் நிரூபிக்கப் பட்டன. பிறகு இரண்டாமத்யாயம் செய்ததென்னென்னில்; முதலத்யாயத்தினால் நிரூபிக்கப்பட்ட அர்த்தம் ஸர்வாத்மநா அசைக்கமுடியாததென்று பரபக்ஷப்ரதிக்ஷேப பூர்வகமாக ஸாதித்ததுடன் ஸ்ரீ பாஞ்சராத்ர மென்கிற பகவத் ப்ரணீத சாஸ்த்ர விசேஷத்தினால் தேறிய பொருளென்றும் நிரூபித்து ஸகல சேதநாசேதநப் பொருள்களும் பரமபுருஷகார்யபூதங்களே யென்பதை நன்கு சோதிக்கும் முகத்தால் கார்ய ஸாமாந்யமும் ப்ரப்ரஹ்ம கார்யமே யென்பதும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆக இரண்டத்யாயங்களாலும் புருஷார்த்த ஸ்வரூபம் நிச்சயிக்கப் பட்டதாகத் தேறிற்று. இப்படி புருஷார்த்த ஸ்வரூபம் நிச்சயிக்கப்பட்டாலும், அநாதிவாஸநா பலத்தாலே க்ஷுத்ர புருஷார்த்தங்களையே நச்சிக்கிடக்கும் ஸம்ஸாரிகளுக்குப் பரமபுருஷார்த்த ப்ராப்தியில் பதற்ற முண்டாகாமைக்குக் காரணம்—தாங்கள் விரும்பிய புருஷார்த்தங்கள் அல்பாஸ்திரங்களென்பதை ஆராய்ந்துணராமையே யென்று கருதிய சாஸ்த்ரகாரர், அந்த ஸம்ஸாரிகளுக்கு இதர புருஷார்த்தங்களில் வைராக்யத்தையும் பரம புருஷார்த்தத்தில் மிகுந்த ருசியையு முண்டாக்குவதற்காக கர்மபலங்களெல்லாம் க்ஷயிஷ்ணுக்களென்றும் பரமபுருஷ உபாஸநபலமான அபவர்க்கமொன்றே நித்ய புருஷார்த்தமென்றும் தெரிவித்து இவ்வழியாலே பரமபுருஷார்த்த ப்ராப்தியில் த்வராதிசயத்தை யுண்டாக்கவே பின்னிரண்டு அத்யாயங்களை அவதரிப்பிக்கின்றார். ஏற்கெனவே கர்மவிசாரம் செய்து அதன்பலன்களை நச்வரங்களென்றறிந்து வைராக்யம் பெற்றவனுக்கே ப்ரஹ்மமீமாம்

ஸையில் அதிகாரமென்று ஜிஜ்ஞாஸா ஸூத்ரத்திலேயே நிரூபிக்கப்பட்டிருப்பதனால் மறுபடியும் வைராக்யத்தை யுண்டாக்குவதற்காக இந்த ப்ரயத்நம் வீணல்லவோ வென்று சிலர் சங்கிக்கவுங் கூடும்; ஆகிலும் கேண்மின்; பஞ்சாக்நி வித்யா நிரூபணத்தினால் விஷயங்களில் எப்படிப்பட்ட வைராக்யம் உண்டாகுமோ அது கர்ம விசாரத்தினால் உண்டாகமாட்டாதென்று கருதியே இங்கு புநःப்ரயத்நம் கொள்ளப்படுகிறது. ஆகவே இது நிஷ்ப்பலமன்று, ஸபலமே. இந்த மூன்றாமத்யாயத்தின் முதற் பாதத்தில் பஞ்சாக்நி வித்யா நிரூபணம் செய்து கர்ம பலன்களெல்லாமும் நச்வரங்களென்றும் நரகதுல்யங்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. மூன்றாமத்யாயமானது பரம புருஷப்ராப்திக்கு உபாயத்தைத் தெரிவிப்பதென்றும், நான்காமத்யாயமானது உபாய பலமான உபேயத்தைத் தெரிவிப்பதென்றும் நெஞ்சிற்கொள்க.

53. உபய லிங்காதிகரணத்தின் ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது. இது மூன்றாமத்யாயத்தின் இரண்டாவது பாதத்திலுள்ளது. ஜீவாத்மாவானவன் ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி மூர்ச்சாதி அவஸ்தைகளுக்கு ஹேதுவான நாநா சரீரங்களை ஏற்றுக்கொண்டு அவ்வவஸ்தைகளில் ஸுகதுக்கங்களை யநுபவிக்கிறானென்னுமிடம் கீழே நிரூபிக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஜீவனாலே அதிஷ்டிதமான சரீரத்தில் பரமாத்மாவும் ஸம்பந்தப்பட்டிருந்தாலும் தத்ப்ரயுக்தமான ஸுகதுக்காதி அபுருஷார்த்தலேசமும் தன்னிடத்தில் ஒட்டப்பெறாமலிருக்கிறானென்பதையும் கல்யாணகுணக்கடலாயிருக்கிறானென்பதையும் நிரூபிக்க இவ்வதிகரணம் தோன்றியது. * न स्थानतोऽपि परस्योभयलिङ्गं सर्वत्र हि * [ந ஸ்தாநதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி] என்பது இவ்வதிகரணத்திற்குத் தலையான ஸூத்ரம். பரஸ்ய-பரமபுருஷனுக்கு, ஸ்தாநத: அபி-ஜீவாதிஷ்டித நாநாசரீரங்களில் இருப்பு இருந்தாலும், ந—அபுருஷார்த்த ஸுகதுக்க ஸம்பந்தம் கிடையாது. (இதற்கு ஹேதுவென்னெனில்;) ஸர்வத்ர ஹி உபயலிங்கம்—பரமபுருஷன் ஸர்வச்ருதிஸ்மிருதிகளிலும் ஹேயப்ரத்யநீகத்வம் கல்யாணைகதாநத்வம் என்கிற இரண்டு அஸாதாரண தர்மங்களோடு கூடியவனாக ப்ரதிபாதிக்கப்படுகையாலே—என்பது ஸூத்ரத்தின் பொருள். இதைச்சிறிது விவரிப்போம். * अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोकोऽविजिघत्सोऽपिपासस्सत्यकामस्सत्यसंकल्पः * இத்யாதிச்ருதிகளும், *परः पराणां सकला न यत्र क्लेशादयस्सन्ति परावरेशे* இத்யாதி ஸ்ம்ருதிகளிலும் பரமபுருஷன் இயற்கையாகவே ஹேயப்ரத்யநீகனாயும் கல்யாணகுணாகரனாயுமிருக்கிறானென்று சொல்லப்படுகையாலே ஹேயப்ரதிபடனான அப்பரமபுருஷனிடத்தில் சரீரஸம்பந்தமானது அபுருஷார்த்த ஸுகது:க்காபத்திக்கு ஹேதுவாகமாட்டாது. அவன் அபஹதபாப்மாவெனப்படுகிறான். அபஹதபாப்மத்வமாவது இன்னதென்பதைக் கீழே ஆநந்தமயாதிகரணத்தில் விவரித்திருக்கிறோம். புண்யபாபரூப கருமங்களின் பலன் ஸ்பர்சிக்கப்பெறாதிருத்தலே அபஹதபாப்மத்வமாம். அதாவது, புண்ய பாப ஸஜாதீயங்களான கருமங்களைத்தான் செய்தாலும் அவை பலன் கொடுக்கும்படியான சக்தியைப் பெறாதபடி அந்த சக்தியைத் தொலைத்திடுகையேயாம். ஹேயப்ரத்யநீகத்வமென்பதும் இதுவே. இப்படி விலக்ஷணசக்தியுக்தனான பரமபுருஷனிடத்தில் ஹேயதேஹஸம்பந்த முண்டானாலும் அது அபுருஷார்த்த ஸுகதுக்க ஸமுத்பாதகமாக ஆகமாட்டாது. ஹேயதேஹஸம்பந்தமானது கர்மாதீநமன்றிக்கே ஸ்வேச்சாக்ருதமாகையாலே. இதற்குமேல் ஒரு சங்கைதோன்றும்: பரமபுருஷனுக்கு தேஹஸம்பந்தம் கர்மப்ரயுக்தமன்றிக்கே ஸ்வேச்சாக்ருதமாகவே யிருக்கட்டும். ஹேயஸம்பந்தமானது வஸ்துஸ்வபாவத்தாலே அபுருஷார்த்தாபாதகமாகியே தீருமன்றோ. மாம்ஸாஸ்ருக்பூய விண்மூத்ரவெள்ளத்தில் ஒருவன் ஸ்வேச்சையினாலே அமிழ்ந்தாலும் ஹேயஸம்பந்த முண்டாகித்தானே தீரும்—என்று சங்கிக்கக்கூடும். இங்கு உணரவேண்டிய தத்துவமாவது—ஹேயத்வமென்பது கர்மக்ருதமேயொழிய வஸ்துஸ்வபாவப்ரயுக்தமன்று. ஸம்

ஸாரதசையில் எந்தவஸ்துவும் அநுகூலமாகத் தோன்றுவதும் பிரதிகூலமாகத்தோன்று வதும் வஸ்துஸ்வபாவத்தாலன்று. அப்படியாகில் எதுவும் எவனுக்கும் அனுகூலமாக வேயோ ப்ரதிகூலமாகவேயோ இருந்து தீரவேணும். இப்படி எங்கும் காணப்படவில்லை. இன்று அநுகூலமானதே நாளைக்கு ப்ரதிகூலமாகிறது. அதுதானே மற்றொருநாள் அநு கூலமாகிறது. ஆகவே எந்த வஸ்துவும் ஸம்ஸார தசையில் அநுகூலமாயிருப்பதும் பிரதி கூலமாயிருப்பதும் கர்மக்ருதமேயாதலால் அகர்மவச்யனான பரமபுருஷனுக்கு ஸர்வவஸ் துக்களும் தன் விபூதியாய்க்கொண்டு அநுகூலமாகவேயிருக்குமென்று கொள்ளக்கடவது. ஆகவே ஹேயபூத தேஹஸம்பந்தம் பரமபுருஷனிடத்தில் அபுருஷார்த்தாபாதகமாகா தென்க. இந்த சாரீரக மீமாம்ஸையிலேயே முதலத்யாயத்தின் இரண்டாவது பாதத்தில் * संभोगप्राप्तिरितिचेन्न वैशेष्यात् * भोक्त्रापत्तेरविभागश्चेत्स्याल्लोकवत् * என்கிற ஸூத்திரங்களில்— பரமாத்மாவுக்கு ஜீவாதிஷ்டித சரீர ஸம்பந்தமிருந்தாலும் அகர்மவச்யனுகையாலே ஸுகது:க்காதிரூப கர்மபலஸ்பர்சமில்லை யென்னுமிடம் நிரூபிக்கப்பட்டே யிருப்ப தால் இவ்வதிகரணம் அத்தோடு புநருக்தமாகிறதே யென்று சிலர் சங்கிக்கக் கூடும். அவ்விடத்துப் பூர்வபக்ஷ சரீரம் வேறு, இவ்விடத்துப் பூர்வபக்ஷ சரீரம் வேறு என்பதை ஸூக்ஷ்மேக்ஷிகையாலுணரவேணும். இங்கு விரிவுக்கு அஞ்சி நிற்கிறோம்.

54. இனி, மூன்றாமத்யாயத்தின் கடைசி பாதத்திலுள்ள ஸர்வாந்நாநுமத்யதி கரணம் பற்றிப் பேசுவோம். இதற்கு முந்தின அதிகரணத்தில் ப்ரஹ்மவித்யா நிஷ்ட னுக்கு சமம் ஆவச்யகமென்று சொல்லிற்று. போஜந நியமமாகிற சமவிசேஷம் ப்ரஹ்மவித்துக்கு உண்டா இல்லையா என்பதை விசாரித்து நிர்ணயிக்க இவ்வதிகரணம் தோன்றியது: * सर्वान्नानुमतिश्च प्राणात्यये तद्दर्शनात् * [ஸர்வாந்நாநுமதிச்ச ப்ராணாத்யயே தத்தர்சநாத்] என்பது ஸூத்ரம். சசப்தமானது அவதாரணப்பொருளது. ப்ராண வித்யா நிஷ்டன் எந்த அன்னத்தையும் புஜிக்கலாமென்று அனுமதிப்பது ப்ராணாபத் தசையைப்பற்றியதேயாம்; ப்ரஹ்மவித்தான அதிகாரியின் விஷயத்தில் ப்ராணாபத் விஷயமாகவே காண்கையாலே—என்று ஸூத்ரார்த்தம். இங்கு பூர்வபக்ஷம்; சாந் தோக்யத்தில் ஐந்தாவது ப்ரபாடகத்தில் ப்ராண வித்யாப்ரகரணத்தில் * न ह वा एवंविदि किञ्चन अनन्नं भवति * என்று ஓதப்பட்டிருக்கிறது. ப்ராண வித்யா நிஷ்டனுக்கு அன்ன மாகாதது எதுவுமில்லை யென்று இதற்குப் பொருள். ப்ராண வித்யா நிஷ்டனுக்கு நிஷித்தாந்ந போஜனமும் ஸர்வதா கூடுமென்றும், வித்யா மாஹாத்மியத்தினால் இதில் தவறில்லை யென்றும் சொல்லுவதாகத் தெரிகிறது. அல்ப சக்திகனான ப்ராண வித்யா நிஷ்டனுக்கே நிஷித்தாந்ந போஜனம் அனுமதிக்கப்படுமானால் ப்ரஹ்ம வித்யா நிஷ்ட னுக்கு அந்த அநுமதி கைமுதிக ந்யாய ஸித்தமே—என்று பூர்வபக்ஷம், இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:—ப்ரஹ்ம வித்யா நிஷ்டனான உஷஸ்தன் ப்ராணாபத் தசையில் ஒரு யானைப் பாகன் உண்டு மிகுந்த காராமணியை புஜித்து அதனால் உயிர்தரிக்கப் பெற்றானென்றும், பிறகு அந்த ஆனைப்பாகன் கொடுத்த பானத்தை அவன் [உஷஸ்தன்] ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் சாந்தோக்யத்தில் முதல் ப்ரபாடகத்தில் (கண்டம்-9) உஷஸ்த வ்ருத்தாந்த ப்ரகரணத்தில் காண்கிறது. இதனால், மஹா மஹிமசாலியான ப்ரஹ்மவித்துக்கும் நிஷித்தாந்நபக்ஷணம் ஆபத்விஷயமென்று தெரிவதனாலும், * आहारशुद्धौ सत्त्वशुद्धिः ; सत्त्वशुद्धौ ध्रुवा स्मृतिः * என்று ஆஹார சுத்தி ஆவச்யகமென்று தெரிவதாலும், * प्राणसंशयमापन्नो योऽन्नमत्ति यतस्ततः । लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा * என்று ப்ராஹ்மண ஸாமாந்யத்திற்கும் ஆபத்காலத்தில் ஸர்வாந்நமும் அநுமதிக்கப் படுவதாகக் காண்கையாலும் ப்ரஹ்மவித்தான அதிகாரி விசேஷத்திற்கும் ஸர்வாந்நா நுமதியானது ஆபத்கால மாத்ரவிஷயகமென்று ஸித்திக்கும்போது, அல்பசக்தியான ப்ராணோபாஸகனுக்குக் காணும் ஸர்வாந்நாநுமதியும் ஆபத் விஷயகந்தானென்பது பற்றிச் சொல்லவேணுமோ?

55. இனி நான்காவது அத்யாயத்திற்குச் செல்வோம். பெரும்பாலும் உபா ஸநபரமாகச் சென்றது மூன்றாமத்யாயம். உபாஸநத்தின் பலனை நிரூபிக்க அவதரிக்

கின்றது நாலாமத்யாயம். இதில் முதலதிகரணம் ஆவ்ருத்த்யதிகரணம். மோக்ஷத்திற்கு உபாயபூதமான பகவதுபாஸநம் அஸக்ருதாவ்ருத்தி ரூபம் (அதாவது), தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தான ரூபம்; ஏனென்னில், * ब्रह्मविदाप्नोति परम् * இத்யாதிகளில் விதிக்கப்பட்ட வேதநமானது அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாந ரூபத்யாநத்வாவஸ்தையை யுடையதென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே—என்னும் பொருளதான ஸூத்ரம் * आवृत्तिरसकृदुपदेशात् * [ஆவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத்] என்பது முதல் ஸூத்ரம். இங்கு பூர்வபக்ஷம் ;—* ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत * இத்யாதிகளில் ஸ்வர்க்க ஸாதநமாக விதிக்கப்பட்ட யாகாதிகள் ஸக்ருத்கரணத்தாலேயே எப்படி ஸ்வர்க்காதி பல ஸாதகமாகிறதோ அப்படி இங்கும் *ப்ரஹ்மவிதாப்நோதி பரம்* இத்யாதிகளில் மோக்ஷஸாதநமாக விதிக்கப்பட்ட பகவச்சிந்தநரூபமான வேதநமும் ஸக்ருதநுஷ்டாநத்தாலேயே மோக்ஷ ஸாதகமாகக் கூடுமாதலால் அது ஒருகாலே செய்யப்பட வேண்டுமென்று. இப்பூர்வ பக்ஷத்தின்மேல் ஸித்தாந்தம் வருமாறு :—வேதாந்த சாஸ்த்ரங்களில் மோக்ஷஸாதந மானதைச் சொல்லி வருமடைவுகளில் வேதநம், உபாஸநம், த்யாநம், த்ருவாஸ்ம்ருதி, ஸாக்ஷாத்காரம், பக்தி என்கிற சப்தங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் பர்யாயபதங்களென்று நிச்சயிக்கப்படுமிடத்து தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாந ரூபமானதென்றே அறுதியிட வேண்டியதாகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (6—7—91). * तद्रूपप्रत्यये चैका सन्ततिश्चान्यनिःस्पृहा । तद्ध्यानं प्रथमैः षड्भिरङ्गैर्निष्पाद्यते नृप * இத்யாதி ச்லோகங்களும் *பக்த்யா த்வநந்யயா சக்யஃ அஹமேவம் விதோர்ஜுந* இத்யாதி கீதா ச்லோகங்களும் இதையே வற்புறுத்துகின்றன. மேலே ஆறுவதாக ஆப்ரயாணாதிகரண முள்ளது. *ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்* என்பது ஸூத்ரம். மோக்ஷஸாதநமான ப்ரஹ்மோபாஸநமானது மரணாந்தமாக அநுஷ்டிக்கப்பட வேண்டுமென்று அதில் நிகமிக்கப்படுகின்றமையறிக.

56. இனி, ததுதிகமாதிகரணத்தின் ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது. * तदधिगम उत्तरपूर्वाघयोरश्लेषविनाशौ तद्व्यपदेशात् * [தததிகம உத்தரபூர்வாகயோரச்லேஷவிநாசௌ தத்வ்யபதேசாத்] என்பது ஸூத்ரம். ப்ரஹ்மவித்யாநிஷ்டனுக்கு ஸாக்ஷாத்காராவஸ்தையையடைந்த ப்ரஹ்மவித்யா நிஷ்பத்தியுண்டாகுமளவில் ப்ரஹ்மவித்யாமஹிமையினாலே பூர்வபாபங்களுக்கு விநாசமும் உத்தரபாபங்களுக்கு அச்லேஷமுமாகும்; ச்ருதிகளில் அப்படி சொல்லியிருப்பதனாலே—என்பது ஸூத்ரார்த்தம். ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு முன்புசெய்த பாபங்கள் நசித்துப் போய்விடும்; பிறகு அபுத்தி பூர்வகமாக நேரும் பாபங்கள் தாமரையிலையில் தண்ணீர்போல ஒட்டமாட்டா என்றபடி. சாந்தோக்யச்ருதியில் உபகோஸல வித்யாப்ரகரணத்தில் * यथा पुष्करपलाशे आपो न श्लिष्यन्ते एवमेवंविदि पापं कर्म न श्लिष्यते " என்றும், அவ்விடத்திலேயே வைச்வாநரவித்யாப்ரகரணத்தில் * यथेषीकतूलमग्नौ प्रोतं प्रदूयेत एवं हास्य सर्वे पाप्मानः प्रदूयन्ते * என்றும் ப்ரஹ்மவித்யையின் பலன் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையாலே உத்தரபாபங்களுக்கு அச்லேஷமும் பூர்வபாபங்களுக்கு விநாசமும் சொல்லப்படுகிற தென்கை. இங்குப் பூர்வபக்ஷம்; * नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि * [நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி] என்று பலனை யநுபவித்தே கருமங்களைத் தொலைக்க வேணுமென்று ப்ரஹ்மவைவர்த்தத்தில் சொல்லியிருக்கையாலே கர்மபலன்களை அநுபவித்தே தீரவேண்டும்; ப்ரஹ்மவித்யையினாலேயே கருமங்கள் தீர்ந்து போவதாகச் சொல்லுவது ப்ரசம்ஸாபரமான வார்த்தையாமத்தனை—என்று. இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு; பூர்வபாபங்களுக்கு விநாசமும் உத்தரபாபங்களுக்கு அச்லேஷமும் ப்ரஹ்மவித்யா ப்ரபாவத்தாலே நேருவதாகப்பல உபநிஷத்துக்கள் கூறியிருப்பது அபலபிக்க முடியாதது. *நாபுக்தம் க்ஷீயதே கர்ம* என்ற வசனமும் யுக்தமானதே; அது ப்ரஹ்மவித்துக்களல்லாத ஸாமாந்யர் விஷயமாக ஓதுக்கத்தகும். ஆகவே இவை பரஸ்பரம் அவிருத்தங்களான வசனங்களேயாம். 'நெருப்பு வீட்டைக் கொளுத்தியே தீரும்'

என்று ஒருவன் சொல்லுகிறான்; 'பற்றியெரிகிற நெருப்பைத் தண்ணீர் அணைத்தே தீரும்' என்று மற்றொருவன் சொல்லுகிறான். இவற்றில் பரஸ்பரவிரோதம் சிறிதேனுமுண்டோ? தண்ணீர் இல்லையானால் படர்ந்தெரிகிற நெருப்பு வீட்டைக் கொளுத்தியே தீருமென்றும், தண்ணீரையிட்டு அணைத்தால் நெருப்பு ஓய்ந்துவிடுமென்றும் அர்த்தமாகவில்லையோ. அதுபோல, ப்ரஹ்மவித்யை இல்லாதவளவில் கர்மங்கள் பலனைக் கொடுத்தேதீருமென்றும், ப்ரஹ்மவித்யையுண்டாகில் கருமங்களின் சக்தி ப்ரதிஹதமாய் விடுமென்றும் எளிதாக அர்த்தமாகுமன்றோ.

57. இனி நிசாதிகரணத்தைப் பற்றிப் பேசுவோம். * निशि नेतिचेन्न संबन्धस्य यावद्देहभावित्वात् दर्शयति च * என்கிற ஒரு ஸூத்ரமே கொண்டது இவ்வதிகரணம். இரவில் இறந்தவற்கு ப்ரஹ்மப்ராப்தி உண்டா இல்லையா என்று விசாரிக்கப்படுகிறது. நிசி மரணத்தைப்பற்றி சாஸ்த்ரங்களில் இழிவாகச் சொல்லப்பட்டிருப்பதனால் பரமபுருஷார்த்தமான மோக்ஷமானது ஸம்பவிக்கமாட்டாது. பகலில் மரணமே சாஸ்த்ரங்களில் ப்ரசஸ்தமாகக் காண்கிறது. நிசாமரணம் இதற்கு விபரீதமானது. * दिवा च शुक्लपक्षश्च उत्तरायणमेव च। मुमूर्षतां प्रशस्तानि विपरीतं तु गर्हितम्॥ * என்று ஸ்பஷ்டமாக சாஸ்த்ரமிருப்பதால் நிசிமரணம் அதமகதிக்கே ஹேதுவாகுமாதலால் இரவில் இறப்பவற்கு ப்ரஹ்மப்ராப்தி ஸம்பவிக்கமாட்டாது என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக, இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:—ப்ரஹ்மவித்துக்களுக்கு கர்மஸம்பந்தம் தேஹமுள்ள வரைக்குமேயாதலால் நிசிமரணம் ப்ரஹ்மவித்துக்களுக்கு பாதகமாகாது. (இதைச்சிறிது விவரிப்போம்.) பாபகருமங்கள் ஆரப்தகார்யங்களென்றும் அநாரப்தகார்யங்களென்றும் இருவகைப்படும். இன்னமும் பூர்வபாபங்களென்றும் உத்தரபாபங்களென்றும் இருவகைப்படும். பலன் கொடுக்கத் தொடங்கிவிட்ட கருமங்கள் ஆரப்தகார்யங்களெனப்படும். இவையே ப்ராரப்த கர்மமென்று வழங்கப்பெறும். பலன் கொடுக்கத் தொடங்காத தீவினைகள் அநாரப்தகார்யங்களெனப்படும். ஸஞ்சிதகர்மமென்பது இதுவே. ப்ரஹ்மவித்யையை ஸம்பாதிப்பதற்கு முன்னே செய்யப்பட்ட பாபங்கள் பூர்வபாபங்களெனப்படும். அதற்குப் பிறகு புத்திபூர்வமான பாபங்கள் நேருவதற்கு ப்ரஸக்தியில்லாமையாலே அபுத்திபூர்வமாகவும் அகதிகமாகவும் நேருமவை உத்தரபாப மெனப்படுமென்று இதை முன்னமே சொன்னோம். இவற்றுள் அநாரப்த கார்யங்களான கருமங்கள் ப்ரஹ்மவித்யாஸம்பந்த முண்டானவன்றே தொலைந்து போயினவாதலாலும், உத்தரபாபங்கள் ப்ரஹ்மவித்துக்களிடத்தில் ஒட்டமாட்டாவென்று சொல்லப்படுகையாலும் ப்ராரப்த கர்மமொன்றே சேஷித்து நிற்கிறது. அக்கருமம் சரமதேஹத்தோடு கழியுமாதலால் பந்தஹேதுவாகமாட்டாது. ஆகவே ப்ரஹ்மவித்துக்களுக்கு நிசிமரணம் நேர்ந்தாலும் பரமபுருஷார்த்தமான ப்ரஹ்மப்ராப்திக்குக் குறையில்லை யென்றதாயிற்று. *திவா ச சுக்லபக்ஷச் ச* என்று கீழே காட்டின வசனம் ப்ரஹ்மவித்துக்களல்லாதார் விஷயமென்றும் முடிந்தது.

58. இதற்கு மேலுள்ள தக்ஷிணாயநாதிகரணத்தின் ப்ரமேயமும் விவரிக்கப்படுகிறது. * अतश्च अयनेऽपि दक्षिणे * என்கிற ஒரு ஸூத்ரமே கொண்டது இவ்வதிகரணமும். நிசிமரணமடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்திக்குக் குறையில்லையென்பதற்கு, மூர்த்தின அதிகரணத்தில் எந்த ஹேது சொல்லப்பட்டதோ, அந்த ஹேதுவினாலேயே தக்ஷிணாயநத்தில் மரணமடைந்தவற்கும் ப்ரஹ்மப்ராப்தியில் குறையில்லை யென்பது ஸித்தமே. ஆனாலும் இவ்வதிகரணத்தில் அதிகப்படியான சங்கை என்னவென்றால், தைத்திரீய உபநிஷத்தில் * अथ यो दक्षिणे प्रमीयते पितृणामेव महिमानं गत्वा चन्द्रमसस्सायुज्यं गच्छति * என்று, தக்ஷிணாயநத்தில் மரணமடைந்தவற்கு சந்த்ரப்ராப்தி சொல்லப்படுகிறது; சந்த்ரப்ராப்தி பெற்றவர்களுக்குப் புநராவ்ருத்தியும் சொல்லப்படுகிறது. பீஷ்மர் முதலான சில ப்ரஹ்மவித்துக்களும் உத்தராயணப்ரதீக்ஷை பண்ணினதாகத் தெரியவருகிறது. ஆக இக்காரணங்களினால் தக்ஷிணாயனத்தில் இறந்தவற்கு ப்ரஹ்மப்ராப்தி ஸம்பவிக்க ஔசித்யமில்லை—என்பதாம். இதற்குப் பரிஹாரமாவது, சந்த்ரப்ராப்தியினால் புநராவ்ருத்தியென்பது ப்ரஹ்மவித்துக்களல்லாதார்க்கேயொழிய ப்ரஹ்ம

வித்துக்களுக்கன்று. ப்ரஹ்மவித்துக்களுக்கும் சந்த்ரப்ராப்தியுண்டானாலும் அது இடையில் இளைப்பாறும் ஸ்தானமாகுமத்தனை. பந்தஹேதுவான கருமம் தொலைந்து விட்டதென்கிற பூர்வோக்த ஹேதுவுக்குக் கண்ணழிவில்லாமையாலே ப்ரஹ்மப்ராப்தி அவர்ஜநீயமாகவே தேறும். பீஷ்மர் உத்தராயணப்ரதீக்ஷை பண்ணினரென்ற விஷயத்தில் அறியத்தக்கதொன்றுண்டு. அவர் மதுவித்யாநிஷ்டர். மதுவித்யா ப்ரபாவத்தினால் ஸ்வச்சந்த மரணத்வமுள்ளது. அதனாலும், உத்தராயணத்தின் மேன்மையைக் காட்டவேண்டியும் அவர் உத்தராயணப்ரதீக்ஷை பண்ணினவளவால் தக்ஷிணாயனத்தில் மரணமடைந்தவர்களுக்கு ப்ரஹ்மப்ராப்தியில் கண்ணழிவு சொல்லமுடியாது. ஆக இவ்வளவால், ப்ரஹ்மவித்துக்களுக்கு நிசிமரணமோ க்ருஷ்ணபக்ஷமரணமோ தக்ஷிணாயநமரணமோ நேர்ந்தாலுங்கூட பரமபுருஷார்த்த ப்ராப்தியில் குறையில்லையென்றதாயிற்று.

59. இனி, சாரீரக மீமாம்ஸையில் முடிவான அதிகரணமாகிய ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணத்தின் ப்ரமேயம் தெரிவிக்கப்படுகிறது. முக்த புருஷனுக்கு ஜகத்ஸ்ருஷ்டியில் அதிகாரமில்லையென்பதும் பரம பதத்தினின்று மீட்சியில்லையென்பதும் இவ்வதிகரணத்தில் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வதிகரணத்திற்கு * जगद्व्यापारवर्जं प्रकरणादसन्निहितत्वाच्च * என்பது முதல் ஸூத்ரம்; * अनावृत्तिश्शब्दादनावृत्तिश्शब्दात् * என்பது முடிவான ஸூத்ரம். முதல் ஸூத்ரத்தின் அர்த்தமாவது, முக்தனுடைய ஐச்வர்யம் ஜகந்நியமனத்தைத் தவிர்த்தேயாம். ஏனென்னில்; பரப்ரஹ்மத்தைக் குறித்துச் சொல்லும் ப்ரகரணங்களிலேயே ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றைச் சொல்லியிருக்கிறபடியாலும், அவற்றைச் சொல்லும் ப்ரகரணங்களில் ஜீவன் ப்ரஸ்துதனாக இல்லாமையாலும்—என்பதாம். இங்கு பூர்வபக்ஷம் வருமாறு ;—முண்டகோபநிஷத்தில் *यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं पुरुषं ब्रह्मयोनिम् । तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति * என்று முக்தனுக்குப் பரப்ரஹ்மத்தோடு ஸாம்யம் ஓதப்பட்டுள்ளது. இன்னமும் சாந்தோக்யோபநிஷத்தில் * स यदि पितृलोककामो भवति संकल्पादेवास्य पितरस्समुत्तिष्ठन्ति * இத்யாதி வாக்யங்களாலே முக்த புருஷனுக்கு ஸத்ய ஸங்கல்ப த்வமும் ஓதப்படுகிறது. இவ்விரண்டும் முக்தனுக்கு ஜகந்நியாமகத்வரூபமான ஜகதீச்வரத்வமிருந்தாலொழியப் பொருந்தமாட்டாது. முக்தனுக்கு ஈச்வரத்வமில்லையானால் ப்ரஹ்மத்தோடு பரமஸாம்ய முண்டாவதாகச் சொல்வது சேராது. ஆகையாலே முக்தனுக்கும் பரப்ரஹ்மத்திற்குப் போலவே ஜகந்நியாமகத்வரூபமான ஈச்வரத்வத்தை அவசியம் இசைந்து தீரவேண்டும். ஆனது பற்றியே முக்தனைப்பற்றி ஓதுமிடங்களில் *स स्वराड् भवति ; तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति । * என்றும் * इमान् लोकान् कामान्नी कामरूप्यनुसञ्चरन् * என்றும் சொல்லப்படுகிற ஸர்வலோக ஸஞ்சாரமும் காமாந்நித்வமும் காமரூபித்வமும் பொருந்துகின்றன. ஸர்வலோக ஸஞ்சாரமென்பது ஸர்வலோக நியமனத்திற்காகத்தானே; அது தவிர மற்றொரு பலனும் தேறுகின்றதில்லையாகையாலே ஜகந்நியமனம் முக்தனுக்கு ஸித்தித்தே தீரும். காமாந்நித்வாதிகள் சொன்னபோதே லோகங்கள் அவனுக்கு அதீனமென்பது தேறி நிற்கும். ஆனால் இதற்கு மேல் ஒன்று சொல்லலாம்; முக்தனுக்கு ஸர்வலோக ஸஞ்சாரமானது ஆங்காங்கு போக்ய பதார்த்தங்களை அநுபவிப்பதற்காகவேயொழிய உலகங்களை நியமிப்பதற்காகவன்று என்று சொல்லலாம்; இதுவும் சொல்லமுடியாது; விகாராஸ்பதங்களாகையாலே ஹேயங்களாயிருக்கின்ற லோகங்களையும் அவற்றிலுள்ள பொருள்களையும் போக்யமாகக் கொள்ள ப்ரஸக்தியில்லையன்றோ, அவை ஹேயங்களானாலும் ஸ்வாமியான பரமபுருஷனுடைய விபூதியாகையாலே அவற்றில் போக்யதாபுத்தி ஸம்பவிக்கலாமாகையாலே அவற்றை புஜிக்கைக்காகவே அவ்வோ லோகங்களில் ஸஞ்சாரம் ப்ராப்தமாகிறது என்கிற வாதமும் ஒவ்வாது. சாந்தோக்யத்தில் * ஸ ஸ்வராட் பவதி * என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கையாலே முக்தனுக்கு வேறு யாரும் அதிபதியல்லரென்று நன்கு அறியலாகிறது. முக்திதசையில் முக்தனைக்குறித்து பரப்ரஹ்மம் சேஷியன்று என்று தேறுவதால் ஸ்வாமியின் விபூதிகளையநுபவிப்பதற்காக ஸர்வலோக

ஸஞ்சாரமென்பது பொருந்தாது; அது நியமநார்த்தமாகவே தான்; ஆகவே முக்தனுக்கும் ஜகத்வ்யாபாரமுண்டு—என்பதாகப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது.

60. இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:— *யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே* இத்யாதியுபநிஷத் வாக்யத்தில் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ரூபமான நியாமகத்வத்தைப் பரப்ரஹ்ம லக்ஷணமாகச் சொல்லியிருக்கையாலே அது பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரண மானதென்று விளங்குகிறது. அஸாதாரண தர்மந்தானே லக்ஷணமாயிருக்க முடியும். ஆகவே பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரணதர்மமாக ஓதப்பட்ட ஜகந்நியாமகத்வரூபமான ஜகதீச்வரத்வமானது முக்தனுக்கு ஸம்பவிக்கமாட்டாது. ஸம்பவிக்குமாகில் அது பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரண லக்ஷணமாக வழியில்லை. * भीषाऽस्माद्वातः पवते.... * एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि सूर्याचन्द्रमसौ विधृतौ तिष्ठतः * இத்யாதிச்ருதிகளாலும் ஜகந்நியாமகத்வம் பரப்ரஹ்மத்திற்கே அஸாதாரணமென்று காண்கிறது. * एकः शास्ता न द्वितीयोऽस्ति शास्ता * என்று பரமாத்மா தவிர மற்றையோர்க்கு நியாமகத்வமில்லையென்று ஸ்பஷ்டமாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே முக்தனுக்கு ஜகந்நியாமகத்வரூபமான ஜகதீச்வரத்வம் ஸம்பவிக்கமாட்டாது. * பரமம் ஸாம்ய முபைதி * என்று பரமபுருஷனோடு முக்தனுக்கு வெறும் ஸாம்யம் சொல்லாதே பரமஸாம்யாபத்தி சொல்லியிருக்கையாலே அவனுக்குள்ளதெல்லாம் இவனுக்கும் ப்ராப்தமானாலொழிய பரமஸாம்யம் நிர்வஹிக்க வழியில்லையே யென்றதற்குச் சொல்லுகிறோம். * तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति * என்றவிடத்தில் யாரோடே எந்த அம்சத்தில் ஸாம்யமென்று விசாரிக்குமளவில், "வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி" என்ற சொற்செறிவால் என்ன கிடைக்கிறதென்னில், வித்யா ஸாத்யமான யாதொரு புண்யபாப விதூநநமுண்டோ, அதனாலாகும்பலனில் ஸாம்யமென்று ஏற்படுகிறது. வித்யையென்பது ப்ரஹ்மப்ராப்தி ப்ரதிபந்தகமான புண்ணிய பாபரூபகருமத்திற்கு ப்ராயச்சித்தமானது. ஏவஞ்ச, புண்யபாபரூப கர்மவிதூநந ஸாத்யமான பலன் ப்ரஹ்மாநுபவமே யென்று தேறிற்று. அதில்தான ஸாம்யம் விவக்ஷிதமாகும். முன்னே பரமபுருஷ ப்ரஸ்தாவமிருக்கையாலே அவனோடுதான் ஸாம்யமென்றும் நிச்சயிக்கப்படுகிறது. இந்த ஸாம்யத்தில் பாரம்யமாவது, ப்ரஹ்மாநுபவம் செய்யுமிடத்து தத்குணங்களிலும் தத்விபூதிகளிலும் ஏகதேசத்தையும் விடாமல் பூர்த்தியாக அநுபவிப்பதேயாம். ஆக ஸமஸ்த கல்யாணகுண விபூதிவிசிஷ்ட ப்ரஹ்மாநுபவத்தில் ஸாம்யமென்று தேறிற்று. இந்த ஸாம்யந்தான் * सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चितेति * என்றவிடத்திலும் சொல்லப்படுகிறது. ஆக முக்தனுக்கு பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் ஸித்தித்தபோது ஆநந்த ஸாம்யமும் இந்த ச்ருதியினாலேயே ஸித்தம். * स स्वराड् भवति * [ஸ ஸ்வராட் பவதி] என்றதும் கர்மவச்யத்வமில்லாமையைச் சொல்லுகிறதத்தனை. * ஏஷ ஹ்யேவாநந்தயாதி * இத்யாதி ச்ருதிகளாலே முக்தனுடைய ஸத்தாஸ்திதிப்ரவ்ருத்திகளெல்லாம் பரமபுருஷாதீந மென்று தேறுகையாலும், முக்தனுக்கு ஸத்ய ஸங்கல்பத்வம் இயற்கையாயிருந்தாலும் கருமங்களினால் மறைந்திருந்தவது பரமபுருஷனுடைய அநுக்ரஹத்தாலேயே ஆவிர்ப்பவிப்பதாக ஓதுகையாலும் முக்தைச்வர்யம் முழுவதும் பகவதிச்சாதீநமாயிருகையாலே பரம புருஷனுடைய அஸாதாரணதர்மமான ஜகந்நியமநரூபஐச்வர்யம் முக்தனுக்கு இல்லையென்று முடிந்தது.

61. இப்படி முக்தனுடைய ஐச்வர்யம் பரமபுருஷாதீநமாகில் அந்த பரமபுருஷன்தான் ஸ்வதந்த்ரனாகையாலே அவன் தனது ஸங்கல்பத்தாலே ஒருஸமயம் முக்தனைப் பரமபதத்தில் நின்றும் இந்நிலத்திற்குத் திருப்பியனுப்பிவிடவுங் கூடுமாகையாலே மோக்ஷபுருஷார்த்தமும் அநித்யமாக வேண்டிவருமே என்கிற சங்கை அடுத்தபடியாக உண்டாகக் கூடியது. அந்த சங்கைக்குப் பரிஹாரமாக * अनावृत्तिः शब्दादनावृत्तिः शब्दात् * [அநாவ்ருத்திச் சப்தாத் அநாவ்ருத்திச் சப்தாத்] என்கிற சரமஸூத்ரமவதரிக்

கிறது. சங்காபரிஹாரப்ரகாரம் யாதெனில்; அநந்யதாஸித்தமான ச்ருதிவாக்கியங்களைக் கொண்டே அறியக்கடவதான பொருளை சாஸ்த்ரம் சொன்னபடியே தான் அறிய வேண்டும். பரம புருஷனொருவனுளனென்பதை நாம் எந்த சாஸ்த்ரங்கொண்டு அறிகிறோமோ அந்த சாஸ்த்ரமே முக்தர்களுக்கு மீட்சியில்லை யென்பதையுமறிவிக்கின்றது; * स खल्वेवं वर्तयन् यावदायुषं ब्रह्मलोकमभिसंपद्यते न च पुनरावर्तते नच पुनरावर्तते * मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते * இத்யாதி சாஸ்த்ரங்கள் காண்க.

62. முக்தர்களுக்கு மீட்சியில்லையென்பதை ஸூத்ரகாரர் சாஸ்த்ரத்தைக்காட்டி ஸ்தாபித்தார். பகவானோ கேட்பாரற்ற ஸ்வதந்திரன். சாஸ்த்ரத்தையும் மீறிச்செய்வதற்கு அவன் அசக்தனல்லன். * स्वातन्त्र्यमैश्वरमपर्यनुयोज्यमाहुः * என்னப்பட்ட ஸ்வாதந்திரியத்தாலே ஈச்வரன் ஒன்று செய்யப்புகுந்தால் சாஸ்த்ரம் குறுக்கே நிற்குமோ? என்று சோத்யம் பண்ணினால் இதற்கு ஸூத்ரகாரர் சொன்ன ஸமாதானம் த்ருப்தியை விளைக்காது. சங்கராசார்யரும் தம்முடைய பாஷ்யத்தில் சாஸ்த்ரத்தை யெடுத்துக் காட்டினவளவோடு நின்றுவிட்டார். ஸ்வாமி யெம்பெருமானார் ஆழ்வாரருளிச்செயற் கடலில் ஆழ்ந்து அரும்பெரும் பொருள்களை யறிந்தவராகையாலே அவ்வருளிச்செயல் பரிமளம்கமழ இங்கு அருளிச்செய்திருக்கும் அர்த்தவிசேஷம் ஸ்ரீபாஷ்யத்திற்குச் சிகரமாக விளங்குகின்றது. அவ்வர்த்த விசேஷம் கேண்மின்; ஈச்வரன் ஸ்வதந்திரனேயானாலும் உன்மத்தனல்லன், மூர்க்கனல்லன், அரஸிகனல்லன். ஸத்ய ஸங்கல்பனென்று பேர்பெற்றவன். தன்னுடைய மநோரதத்திற்கு மாறுபாடாக நடந்து கொள்பவனல்லன். ஒரு சேதநனைப் பெறுவதற்கு அப்பரமபுருஷன் என்ன பாடுபடுகிறான்! எவ்வளவு க்ருஷிபண்ணுகிறான்! தெரியுமோ? அவன் ஸ்ருஷ்டிபண்ணுவதும் அவதாரங்கள் பண்ணுவதும் சேதநரை லபிக்கைக்காகவன்றோ. எவ்வளவோ தவப்பயனாக ஒரு சேதநன் வந்துசேர, அவனை லபித்த பின்பும் இழப்பனோ? என்னுமபிப்ராயத்தை * न च परमपुरुषः सत्यसंकल्पः अत्यर्थप्रियं ज्ञानिनं लब्ध्वा कदाचिदावर्तयिष्यति * என்கிற இன்சுவையே வடிவெடுத்த திவ்யஸூக்தியாலே காட்டியருளி சங்காபரிஹாரத்தை மிகவழகாகத் தலைக்கட்டினார். இதில் "பரமபுருஷः ஜ்ஞாநிநம் லப்த்வா" என்கிற ஸ்ரீஸூக்தி விந்யாஸமானது எம்பெருமானார் திருவுள்ளத்தில் திருவாய்மொழி யமுதக்கடல் அலையெறிகிற படியை நன்கு காட்டுகின்றது. *யானொட்டியென்னுள் இருத்துவமென்றிலன், தானொட்டிவந்தென் தனி நெஞ்சை வஞ்சித்து, ஊனொட்டி நின்று என்னுயிருள்கலந்து, இயல்வானொட்டுமோ இனி யென்னை நெகிழ்க்கவே (2747) * என்றும், *வாரிக் கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற வென்னையொழிய என்னில் முன்னம் பாரித்து, தானென்னை முற்றப்பருகினான், காரொக்குங் காட்கரையப்பன் கடியனே (3621) *என்றுமுள்ள திருவாய்மொழிப் பாசுரங்களின் திவ்யார்த்த ஸௌரபத்தோடே ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டப்பட்டிருக்கின்றதென்பதை உபய வேதாந்த ரஸிகர்களே அறியவல்லார். ... ... *

इत्थं द्विषष्टिवार्ताविन्यसनेन प्रधानपरमार्थान्। शारीरकमीमांसाभाष्यात्संगृह्य लिखितवानस्मि ॥
काञ्चीवादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यदासोऽहम्। इह यदि गुणलवलेशः स्यात्तेन परं बुधाः प्रमोदन्ताम् ॥

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எழுதிய

அறுபத்திரண்டு வார்த்தாமாலை

முற்றிற்று.

விஜய பங்குனி விசாக நன்னாள்.